தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY

Advertise Your Business
MAKE YOUR BUSINESS KNOWN TO ALL

சென்னை மலர்: 01 இதழ்: 162 24.01.2026 சனிக்கிழமை
Chennai Volume: 01 Issue: 162 Saturday pages 8 Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

இன்றைய நாள்

சனிக்கிழமை
(24-01-2026)
விசுவாவசு ஆண்டு, தை-10
பிறை: வளர்பிறை
திதி
சஷ்டி இரவு 11.14 வரை
பிறகு சப்தமி
நட்சத்திரம்:
வரை பிறகு ரேவதி
உத்திரட்டாதி நண்பகல் 1.19
யோகம்
சித்த/மரணயோகம்
ராகுகாலம்
காலை 9.00-10.30 மணி
எமகண்டம்
நண்பகல் 1.30-3.00 மணி
சூலம் -கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 5-6 மணி

மேஷம் ..... வெற்றி
ரிஷபம்..... பக்தி
மிதுனம் ..... பாராட்டு
கடகம்..... கவனம்
சிம்மம் ..... நற்செயல்
கன்னி..... லாபம்
துலாம் .....தாமதம்
விருச்சிகம்..... வரவு
தனுசு..... ஆதாயம்
மகரம் ..... இரக்கம்
கும்பம்..... நன்மை
மீனம்..... பொறுமை

திருவனந்தபுரம் - தாம்பரம் உள்பட 3 அம்ருத் பாரத் ரயில்களை தொடக்கிவைத்தார் பிரதமர் மோடி

திருவனந்தபுரம்,ஜன.24: கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பிரதமர் நரேந்திர மோடி 3 அம்ருத் பாரத் ரயில் சேவைகளை கொடியசைத்து தொடக்கிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து திருவனந்தபுரம் நவீன அஞ்சலகத்தையும் அவர் திறந்துவைத்தார்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற அரசு விழாவில் கலந்துகொண்ட பிரதமர் நரேந்திர மோடி பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார், முடிவுற்ற பணிகளை தொடக்கிவைத்தார்.



இந்தநிகழ்வில், நாகர்கோவில் - மங்களூரு, திருவனந்தபுரம்-தாம்பரம், திருவனந்தபுரம் - சர்லப்பள்ளி இடையே இயக்கப்படும் 3 அம்ருத் பாரத் ரயில் சேவைகளையும், திருச்சூர் - குருவாயூர் இடையே இயக்கப்படும் புதிய பயணிகள் ரயில் சேவையையும் தொடக்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் கேரள ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், முதல்வர் பினராயி விஜயன், மத்திய மற்றும் மாநில அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

இந்தநிகழ்வைத் தொடர்ந்து, விமானம் மூலம் தமிழகத்துக்கு பிரதமர் மோடி புறப்பட்டுள்ளார். சென்னைக்கு வரும் பிரதமர், அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் மதுராந்தகத்துக்குச் செல்கிறார். மதுராந்தகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் நடைபெறும் தேர்தல் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

திமுக அரசுக்கு விடை கொடுக்க தமிழ்நாடு முடிவு செய்துவிட்டது

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெற வாய்ப்பு உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன. பிரசாரம், பொதுக்கூட்டம், கூட்டணி, தொகுதி பங்கீடு, நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன

அந்த வகையில் தமிழக சட்டசபை தேர்தலில் அதிமுக, பாஜக இணைந்து தேசிய ஜனநாயக கூட்டணி அமைத்துள்ளது. இந்த கூட்டணியில் பாமக (அன்புமணி தரப்பு), அமமுக, தமிழ் மாநில காங்கிரஸ், இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதிக்கட்சி, தமிழக மக்கள் முன்னேற்ற கழகம், புரட்சி பாரதம் உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில் திமுக அரசுக்கு விடை கொடுக்க தமிழ்நாடு முடிவு செய்துவிட்டது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் தமிழில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "தமிழ்நாடு தேசிய ஜனநாயக கூட்டணியுடன் இருக்கிறது! மதுராந்தகத்தில் இன்று பிற்பகலில் நடைபெறும் பேரணியில் நான் தேசிய ஜனநாயக கூட்டணித் தலைவர்களுடன் கலந்துகொள்ள இருக்கிறேன். ஊழல் திமுக அரசுக்கு விடை கொடுக்கும் காலம் வந்துவிட்டது என்று தமிழ்நாடு முடிவு செய்துவிட்டது.

தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியின் சாதனையும் பிராந்திய பெருவிருப்பங்கள் மீதான அதன் அர்ப்பணிப்பும் மாநில மக்கள் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

"பாஜக கூட்டணிக்கு தமிழகம் எப்போதுமே தோல்வியைத்தான் தரும்" ஸ்டாலின் பதிலடி!

சென்னை,ஜன.24: "தேர்தல் சீசன் வந்தால் மட்டும், தமிழ்நாடு பக்கம் அடிக்கடி வரும் பிரதமர் மோடி அவர்களே. தொடர்ந்து துரோகங்களை மட்டுமே செய்யும் பாஜக கூட்டணிக்கு தமிழ்நாடு எப்போதுமே தோல்வியைத்தான் தரும்" என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தேசிய ஜனநாயக கூட்டணியின் துரோகங்களை தமிழகம் நினைத்துப் பார்க்கிறது. தேர்தல் சீசன் வந்தால் மட்டும், தமிழ்நாடு பக்கம் அடிக்கடி வரும் பிரதமர் மோடி அவர்களே. தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய 3,458 கோடி ரூபாய் சமக்ர ஷிக்ஷா (SAMAGRA SHIKSHA) கல்வி நிதி எப்போது வரும்?.

மக்களவைத் தொகுதி மறுவரையறையின் கீழ் தமிழ்நாட்டின் தொகுதிகள் குறைக்கப்படாது என்ற உறுதிமொழி உங்கள் வாயில் இருந்து எப்போது வரும்?. பா.ஜ.க.வின் முகவர்போல் செயல்படும் ஆளுநரின் அராஜகம் எப்போது முடிவுக்கு வரும்?. தமிழ்ப்பாசத்தில் தமிழர்களை மிஞ்சியதாய்க் காட்டிக்கொள்ளும் உங்கள் அரசிடம் இருந்து தமிழுக்குரிய நிதி ஒதுக்கீடு எப்போது வரும்?.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் தொடரும், மாநிலங்கள் மீது நிதிச் சுமையை ஏற்றி ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை ஒழித்துக் கட்டும் விபி ஜிராம்ஜி கைவிடப்படும் என வாக்குறுதி எப்போது வரும்?.

பத்தாண்டுகளாக 'இன்ச் இன்ச்'சாக ஒன்றிய பாஜக அரசு இழைத்து வரும் மதுரை எய்ம்ஸ் எனும் எட்டாவது உலக அதிசயம் எப்போது எங்கள் கண்முன் வரும்?. இயற்கைப் பேரிடர்களுக்காக நாங்கள் கேட்ட நிவாரணத் தொகை எப்போதுதான் வரும்?.

ஓசூர் விமான நிலையம், கோவை & மதுரை மெட்ரோ திட்டங்களுக்கு எப்போது ஒப்புதல் வரும்?. கீழடி அறிக்கை எப்போது வெளியே வரும்?.

ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் ஒருமனதான கோரிக்கையான நீட் விலக்கு எப்போது அமலுக்கு வரும்?. தொடர்ந்து துரோகங்களை மட்டுமே செய்யும் பாஜக கூட்டணிக்குத் தமிழ்நாடு எப்போதுமே தோல்வியைத்தான் தரும்" எனத் தெரிவித்துள்ளார். முன்னதாக இதுகுறித்து பிரதமர் மோடி தமிழில் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தமிழ்நாடு தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் இருக்கிறது. மதுராந்தகத்தில் இன்று பிற்பகலில் நடைபெறும் பேரணியில் நான் தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்களுடன் கலந்து கொள்ள இருக்கிறேன்.

ஊழல் திமுக அரசுக்கு விடை கொடுக்கும் காலம் வந்துவிட்டது என்று தமிழ்நாடு முடிவு செய்துவிட்டது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் சாதனையும் பிராந்திய பெருவிருப்பங்கள் மீதான அதன் அர்ப்பணிப்பும் மாநில மக்கள் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன" எனத் தெரிவித்திருந்தார்.

திருவண்ணாமலையில் பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரம்

திருவண்ணாமலை,ஜன.24: திருவண்ணாமலையில் உலக பிரசித்தி பெற்ற அருணாசலேஸ்வரர் கோவில் உள்ளது. திருவண்ணாமலையில் மலையே சிவனாக வழிபடுவதால் அருணாசலேஸ்வரர் கோவில் பின்புறம் உள்ள அண்ணாமலையார் மலை என்று பக்தர்களால் அழைக்கப்படும் மலையை சுற்றி உள்ள 14 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட கிரிவலப்பாதையில் பவுர்ணமி நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்கின்றனர். இதில் கார்த்திகை தீபத் திருவிழாவின் போது மகா தீபம் ஏற்றப்படும் நாளிலும், சித்ரா பவுர்ணமி அன்றும் 40 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கிரிவலம் செல்வார்கள்.

இந்த நிலையில் தை மாதத்திற்கான பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரத்தை கோவில் நிர்வாகம் அறிவித்து உள்ளது. பவுர்ணமி வருகிற 1-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 6.13 மணிக்கு தொடங்கி மறுநாள் 2-ந் தேதி (திங்கட்கிழமை) அதிகாலை 4.45 மணிக்கு நிறைவடைகிறது.

மேலும் வருகிற 1-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினத்தில் வருவதால் அருணாசலேஸ்வரர் கோவிலில் சாமி தரிசனம் செய்யவும், பவுர்ணமி கிரிவலம் செல்லவும் ஏராளமான பக்தர்கள் வருகை தருவார்கள் என்று மாவட்ட நிர்வாகத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இதையொட்டி மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணியில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

குலுக்கல் முறையில் மும்பை மேயர் பதவி மகளிருக்கு ஒதுக்கீடு

மும்பை,ஜன.24: மகாராஷ்டிராவில் 29 மாநகராட்சிகளுக்கு கடந்த 15ம் தேதி தேர்தல் நடைபெற்றது. இதில் 17 மாநகராட்சிகளை பாஜக தனித்து கைப்பற்றியது. மும்பை உட்பட மேலும் 8 மாநகராட்சிகளை பாஜக, சிவசேனா (ஷிண்டே) அடங்கிய மகாயுதி கூட்டணி கைப்பற்றியது. கடந்த 1998-ம் ஆண்டு முதல் மாநகராட்சி தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, ஒவ்வொரு மாநகராட்சியிலும் தனித்தனியாக குலுக்கல் நடத்தப்படும். இதன் மூலம் குறிப்பிட்ட மாநகராட்சியின் மேயர் பதவி பொதுப் பிரிவு, மகளிர், ஓபிசி, எஸ்சி, எஸ்டி சமூகத்தினரில் ஏதாவது ஒரு பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

இதன்படி அந்தந்த மாநகராட்சிகளில் நேற்று குலுக்கல் நடத்தப்பட்டது. இதில் மும்பை மேயர் பதவி பொதுப் பிரிவை சேர்ந்த மகளிருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மும்பை மாநகராட்சியில் மொத்தம் 227 வார்டுகள் உள்ளன. இதில் பாஜக 89, அதன் கூட்டணி கட்சியான சிவசேனா (ஏக்நாத் ஷிண்டே) 29 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன.

மும்பை மாநகராட்சியில் பெரும்பான்மையை நிரூபிக்க 114 கவுன்சிலர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில் பாஜக கூட்டணிக்கு 118 கவுன்சிலர்கள் உள்ளனர். வரும் 28-ம் தேதி மும்பை மேயர் தேர்தல் நடைபெற உள்ளது. தற்போதைய சூழலில் பாஜக பெண் கவுன்சிலர்கள் யோகிதா சுனில் கோலி, தேஜஸ்வி அபிஷேக் கோசல்கர் ஆகியோர் முன் வரிசையில் உள்ளனர்.

உத்தவ் அணி எதிர்ப்பு: மும்பை மாநகராட்சி தேர்தலில் உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா 65 வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளது. மும்பையில் நடந்த குலுக்கலில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாகவும், குலுக்கலின் போது ஓபிசி மற்றும் எஸ்டி பிரிவு சேர்க்கப்படவில்லை என்றும் உத்தவ் அணியை சேர்ந்த முன்னாள் மேயர் கிஷோரி பட்னாகர் குற்றம் சாட்டினார்.

தற்போது எஸ்டி பிரிவை சேர்ந்த பெண் கவுன்சிலர்கள் உத்தவ் தாக்கரே அணியில் மட்டுமே உள்ளனர். ஒருவேளை குலுக்கலின்போது மும்பை மேயர் பதவி எஸ்டி பிரிவு மகளிருக்கு ஒதுக்கப்பட்டு இருந்தால் உத்தவ் அணிக்கு மேயர் பதவி கிடைத்திருக்கக்கூடும் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

16 பெண் மேயர்கள்: மும்பையை தவிர்த்து நவிமும்பை, புனே உள்ளிட்ட 16 மாநகராட்சிகளின் மேயர் பதவிகள் மகளிருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளன. இதில் பெரும்பாலான மாநகராட்சிகளில் பாஜக பெண் மேயர்கள் பதவியேற்க உள்ளனர். தற்போது நடத்தப்பட்டு உள்ள குலுக்கல் நடைமுறைக்குப் பிறகு 29 மாநகராட்சிகளின் மேயர் பதவிகளுக்கு வரும் 28-ம் தேதி தேர்தல் நடத்தப்பட உள்ளது.

இந்தியாவின் மின் விநியோக கட்டமைப்பு 5 லட்சம் சர்க்யூட் கி.மீ. கடந்து சாதனை

புதுடெல்லி,ஜன.24: மத்திய மின் துறை அமைச்சகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: நாட்டின் மின் விநியோகக் கட்டமைப்பு, 220 கிலோவோல்ட் மற்றும் அதற்கும் அதிகமான உயர் அழுத்த மின்சாரத்தைக் கொண்டு செல்லும் திறன் கொண்ட 5 லட்சம் சர்க்யூட் கிலோமீட்டரை கடந்துள்ளது. மேலும், மின் மாற்றும் திறன் 1,407 ஜிகாவோல்ட் ஆம்பியராக அதிகரித்துள்ளது.

ராஜஸ்தான் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மண்டலத்திலிருந்து மின்சாரத்தைக் கொண்டு செல்வதற்காக, பத்லா-II முதல் சீகர்-II துணை மின்நிலையம் வரை 765 கி.வோ. திறன் கொண்ட 628 சர்க்யூட் கி.மீ. மின் விநியோகப் பாதை பயன்பாட்டுக்கு வந்ததையடுத்து இந்த சாதனை மைல்கல் எட்டப்பட்டது.

1,100 மெகாவாட் இந்த மின்பாதை பயன்பாட்டுக்கு வந்ததன் மூலம், பத்லா, ராம்கர் மற்றும் பதேகர் சூரிய சக்தி வளாகங்களில் இருந்து கூடுதலாக 1,100 மெகாவாட் மின்சாரத்தை விநியோகிக்க முடியும்.

கடந்த 2014-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தற்போது வரை, நாட்டின் மின் விநியோகக் கட்டமைப்பு 71.6

சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில் 2.09 லட்சம் சர்க்யூட் கி.மீ. நீளத்திற்கு மின் விநியோகப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், மின் மாற்றும் திறன் 876 ஜிகாவோல்ட் ஆம்பியர் உயர்ந்துள்ளது.

தற்போது பிராந்தியங்களுக்கு இடையேயான மின் பரிமாற்றத் திறன் 1,20,340 மெகாவாட்டாக உள்ளது. இது 'ஒரே தேசம் ஒரே மின் கட்டமைப்பு ஒரே அலை வரிசை' என்ற தொலைநோக்குப் பார்வையை வெற்றிகரமாக நனவாக்கியுள்ளது.

தற்போது பல்வேறு மாநிலங்களுக்கு இடையேயான மின் விநியோகத் திட்டங்களின் மூலம், கூடுதலாக 40,000 சர்க்யூட் கி.மீ. மின்பாதையும், 399 ஜிகாவோல்ட் ஆம்பியர் மின் மாற்றும் திறனும் உருவாக்கப்படும். 2030-ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை எட்டுவதற்கு இந்த கூடுதல் கட்டமைப்பு பெரிதும் உதவும். இவ்வாறு மின் அமைச்சகம் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மைதேயி இளைஞர் கொலை: மணிப்பூரில் மீண்டும் பதற்றம்

இம்பால்,ஜன.24: மணிப்பூரில் மைதேயி மற்றும் குகி பழங்குடியினத்தவர்கள் இடையே நிலம் தொடர்பாக கடந்த சில ஆண்டுகளாக மோதல் நிலவுகிறது.

இந்நிலையில், மைதேயி இனத்தைச் சேர்ந்த சிங் என்பவரை, குகி இனத்தவர்கள் கடந்த புதன்கிழமை கடத்தி சென்றனர்.

அவரை நேற்று சுட்டுக் கொன்றனர். ஐக்கிய குகி தேசிய படையை (யுஎன்கேஏ) சேர்ந்தவர்கள் தான் சிங்கை கடத்தி சென்றதாக சந்தேகிக்கப்படுகிறது. மத்திய அரசின் அமைதி ஒப்பந்தத்தில் இந்த அமைப்பு கையெழுத்திடவில்லை.

அவர்கள் தொடர்ந்து பிரச்சினையை ஏற்படுத்தி வருகின்றனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்கள்தான் சிங் மற்றும் அவரது மனைவியை கடத்திச் சென்றுள்ளனர். பின்னர் சிங்கை மட்டும் சுட்டுக் கொன்று விட்டு மனைவியை விடுவித்துள்ளனர் என்று போலீஸார் தெரிவித்தனர்.

கடந்த 2 நாட்களுக்கு முன்னர்தான் மணிப்பூர் மாநில தினம் கொண்டாடப்பட்ட நிலையில், இந்த படுகொலை மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

நம் வாசவி அம்மன் அக்னி பிரவேச தினம் மற்றும் கரும்பு தீபம் ஏற்றி பூஜை



கிருஷ்ணகிரி, ஜன.24: கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் அமைந்திருக்கும் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வாசவி கன்னிகா பரமேஸ்வரி அம்மன் அக்னி பிரவேஷம் தினத்தை முன்னிட்டு மகா சிறப்பு அபிஷேகம், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, வண்ண மலர் பூக்களால் அர்ச்சனைகள் செய்து, 102 கோத்திரம் செடி வைத்து பூஜை, 102 விளக்கு வைத்து பூஜை, மற்றும் கரும்பு தீபம் ஏற்றி, அபிராமி அந்தாதி பூஜையும் பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகாதீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, ஆரத்தி காண்பித்து பூஜைகளில் அனைவரும் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

ஒருங்கிணைந்த பள்ளி கல்வி, மாற்றுத்திறன் மாணவர்களுக்கான உள்ளடங்கிய கல்வித் திட்டம்

திருவண்ணாமலை, ஜன.24: திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஒன்றியம், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மருத்துவ முகாமை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது.

வட்டார வளமைய மேற்பார்வையாளர் திரு.B. வெங்கடேசன் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்.பள்ளி தலைமை ஆசிரியர் திரு.மு. பிரசன்னா அவர்கள் தலைமை ஏற்று கொடி அசைத்து பேரணியை துவக்கி வைத்தார். சிறப்பு விருந்தினராக வட்டார கல்வி அலுவலர் திரு. ஸ்ரீ ராமுலு அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். மாணவர்கள் அனைவரும் மாற்றுத்திறன் மாணவர்களைப் பற்றிய விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியும் முக்கிய வீதிகள் வழியாக பேரணியாக வந்தனர். பேரணியில் வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள், சிறப்பு பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக வட்டார IE ஒருங்கிணைப்பாளர் திருமதி. செல்வம் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

படப்பிடிப்பு முடிந்து 37 ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக ரிலீஸ் ஆகும் ரஜினி படம்

சென்னை, ஜன.24: ரஜினிகாந்த் தமிழை தாண்டி இந்தி, தெலுங்கு முதல் ஹாலிவுட் வரை பல படங்களில் நடித்துள்ளார்.

குறிப்பாக 1980, 90களில் ரஜினி, சல் பஸ், ஹுஂம் உள்ளிட்ட பல இந்தி படங்களில் நடித்திருந்தார்.

அந்த வகையில் ரஜினி நடித்த "ஹம் மே ஷாஹென்ஷா கவுன்" (உங்களில் யார் ராஜா) என்ற இந்தி படம் 1989 இல் படப்பிடிப்பு முடிந்தும் இன்னும் வெளியாகவில்லை.

மறைந்த இயக்குனர் ஹர்மேஷ் மல்ஹோத்ரா இதனை இயக்கியுள்ளார். இந்த படத்தில் ரஜினிகாந்துடன் சத்ருஹன் சின்ஹா, ஹேமமாலினி, அனிதா ராஜ், பிரேம் சோப்ரா மற்றும் மறைந்த நடிகர்கள் அம்ரிஷ் புரி, ஜகதீப் ஆகியோர் நடித்துள்ளனர்.

படத்தின் தயாரிப்பாளரான ராஜா ராய் உடைய மகன் இறந்தது, இயக்குனரின் மறைவு ஆகியவற்றால் படம் வெளியாகாமல் கிடப்பில் போடப்பட்டது.

தற்போது 37 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தப் படம் ஏப்ரல் 2026-ல் திரையரங்குகளில் வெளியாகவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்தப் படம் 4K தரத்திற்கு மாற்றப்பட்டு மெருகூட்டப்பட்டுள்ளது என்று கூறபடுகிறது.

தேர்தல் சீசன் வந்தால் தமிழ்நாடு பக்கம் வரும் பிரதமர் மோடி ரூ.3,458 கோடி கல்வி நிதி எப்போது வரும்?

முதலமைச்சர் கேள்வி

சென்னை, ஜன.24: பிரதமர் மோடி இன்று தமிழகத்திற்கு வரும் நிலையில் தேசிய ஜனநாயக கூட்டணி செய்த துரோகங்களை பட்டியலிட்டு கேள்விகளை எழுப்பி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

தேர்தல் சீசன் வந்தால் மட்டும், தமிழ்நாடு பக்கம் அடிக்கடி வரும் பிரதமர் மோடி அவர்களே...

தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய 3,458 கோடி ரூபாய் #SamagraShiksha கல்வி நிதி எப்போது வரும்?

#Delimitation-இல் தமிழ்நாட்டின் தொகுதிகள் குறைக்கப்படாது என்ற உறுதிமொழி உங்கள் வாயில்

இருந்து எப்போது வரும்?

பா.ஜ.க.வின் முகவர்போல் செயல்படும் ஆளுநரின் அராஜகம் எப்போது முடிவுக்கு வரும்?

தமிழ்ப்பாசத்தில் தமிழர்களை மிஞ்சியதாய்க்காட்டிக்கொள்ளும் உங்கள் அரசிடம் இருந்து தமிழுக்குரிய நிதி ஒதுக்கீடு எப்போது வரும்?

"#MGNREGA தொடரும், மாநிலங்கள் மீது நிதிச் சுமையை ஏற்றி ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை ஒழித்துக் கட்டும் #VBGRAMG கைவிடப்படும்" என வாக்குறுதி எப்போது வரும்?

பத்தாண்டுகளாக 'இன்ச் இன்ச்'சாக ஒன்றிய பா.ஜ.க. அரசு இழைத்து வரும் மதுரை #AIIMS எனும் எட்டாவது உலக அதிசயம் எப்போது எங்கள் கண்முன் வரும்?

இயற்கைப்பேரிடர்களுக்காக நாங்கள் கேட்ட நிவாரணத் தொகை எப்போதுதான் வரும்?

ஒரூர் விமான நிலையம், கோவை & மதுரை மெட்ரோ திட்டங்களுக்கு எப்போது ஒப்புதல் வரும்?

கீழடி அறிக்கை எப்போது வெளியே வரும்?

ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் ஒருமனதான கோரிக்கையான #NEET விலக்கு எப்போது அமலுக்கு வரும்?

தொடர்ந்து துரோகங்களை மட்டுமே செய்யும் பா.ஜ.க. கூட்டணிக்குத் தமிழ்நாடு எப்போதுமே தோல்வியைத்தான் தரும்! இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பிரியாணியில் 20 தூக்க மாத்திரை.. சாப்பிட்டதும் மயங்கிய கணவன்.. தலையணையால் கதையை முடித்த மனைவி

குண்டூர்,ஜன.24: ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தில் உள்ள சிலுவுரு கிராமத்தை சேர்ந்தவர் லோகம் சிவநாகராஜு.

சிவநாகராஜுவின் மனைவி லட்சுமி மாதுரி, கோபி என்பவருடன் தகாத உறவில் இருந்துள்ளார்.

இதற்கு தடையாக இருந்த கணவனை கொல்ல திட்டமிட்ட மாதுரி கடந்த ஜனவரி 18 இரவு உணவாகப் பிரியாணியைத் தயார் செய்து, அதில் 20 தூக்க மாத்திரைகளைப் பொடித்துக் கலந்து தனது கணவருக்குக் கொடுத்துள்ளார்.

பிரியாணி சாப்பிட்ட சிவநாகராஜு மயக்கமடைந்ததும்,

மாதுரி தனது காதலன் கோபியை வீட்டிற்கு வரவழைத்துள்ளார். இருவரும் சேர்ந்து தலையணையால் சிவநாகராஜுவின் முகத்தை அழுத்தி மூச்சுத்திணறச் செய்து அவரைக் கொலை செய்தனர்.

கொலையைச் செய்த பிறகு, தனது கணவர் மாரடைப்பால் இறந்துவிட்டதாக உறவினர்களிடமும் அக்கம் பக்கத்தினரிடமும் மாதுரி நாடகமாடியுள்ளார். சிவநாகராஜுவின் உடலில் காயங்கள் மற்றும் இரத்தக் கறைகளைக் கண்ட உறவினர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டு போலீசில் புகார் அளித்தனர்.

பிரேதப் பரிசோதனை அறிக்கையில் அவர் மூச்சுத்திணறச் செய்து கொல்லப்பட்டது உறுதியானது. கொலைக்குப் பிறகு மாதுரி சடலத்தின் அருகில் அமர்ந்து ஆபாசப் படங்களைப் பார்த்ததாக வெளியான சில செய்திகள் வெளியான நிலையில் அவற்றை மாவட்ட எஸ்.பி மறுத்துள்ளார்.

மனைவி லட்சுமி மாதுரி மற்றும் அவரது காதலன் கோபி ஆகிய இருவரும் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போரூர் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனையில் தெற்கு ஆசியாவின் நவீன சிடி ஸ்கேனர் அறிமுகம்

சென்னை, ஜன.24: போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில், தெற்கு ஆசியாவின் அதிநவீன வகை சிடி ஸ்கேனர் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. போரூர் ஸ்ரீராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் கதிரியக்க மற்றும் பதிவு தொழில்நுட்ப அறிவியல் துறையில், சிறப்பான படமெடுப்பு திறனுக்காக அதிநவீன வசதிகளுடன் கூடிய 'ஜிஇ அபெக்ஸ் எலைட் 512 ஸ்பெக்ட்ரல்' சிடி ஸ்கேனர் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தெற்கு ஆசியாவில் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த சிடி ஸ்கேனரை, சென்னை மருத்துவக் கல்லூரியின் கதிரியக்கவியல் துறை முன்னாள் தலைவர் டி.எஸ்.சுவாமிநாதன் மற்றும் ஸ்ரீராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் வேந்தர் வி.ஆர். வெங்கடாசலம் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இதன் செயல்பாடு குறித்து, ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனையின் கதிரியக்கத் துறை தலைவர் வெங்கடசாய் கூறுகையில், "இந்த நவீன சிடி ஸ்கேனர் மூலம் கதிரியக்க படம் பிடித்தல், பதிவை உருவகப்படுத்



துதல், காட்சியமைத்தல், நோய் அறிதல் திறனை மேம்படுத்துதல், நோயை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிதல், நோய்த் தன்மைக்கான விளக்கம், நோய்களுக்கு ஏற்ப தகுந்த சிகிச்சையை பரிந்துரைத்தல், ஆய்வு செய்தல் போன்றவற்றை மிக துல்லியமாக செய்து நோயாளிகளுக்கு தனித்துவமான சிகிச்சை அளிக்கலாம்.

அவர்களுக்கான பாதுகாப்பு வசதிகளையும் மேம்படுத்தலாம். அதேபோல், உடனடியாக கவனிக்க வேண்டிய பதிவுகளை முதன்மைப்படுத்தி நோயாளிக்கும், கதிரியக்க பணியாளர்களுக்கும் கதிர்வீச்சை குறைத்து, படத்தின் தரத்தை உயர்த்தி மருத்துவர்களுக்கு சிறந்த தகவல்களை அளிக்க முடியும்.

சவாலான கதிரியக்க பதிவுகளை ஆராய்ந்து கணிப்பதில் உள்ள சிரமங்கள் இந்த நவீன வகை இயந்திரத்தினால் களையப்படும்.

அந்த வகையில், கதிரியக்கத் துறையில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த நவீன சிடி ஸ்கேனர் பயன்படுத்தப்படும்" என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில், ஸ்ரீராமச்சந்திரா கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளை அறங்காவலர் சம்யுக்தா வெங்கடாசலம், துணை வேந்தர் உமா சேகர், இணை துணை வேந்தர் மகேஷ் வக்கமுடி, மருத்துவக் கல்லூரி தலைவர் கே.பாலாஜி சிங், பதிவாளர் எஸ்.செந்தில்குமார், மருத்துவ இயக்குநர் ஆர்.பி. சுதாகர் சிங், மருத்துவ கண் காணிப்பாளர் பி.சுரேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பிரதமர் மோடியின் வருகையால் இயற்கையே இன்று சூரியனை மறைத்துவிட்டது- இபிஎஸ்

மதுராந்தகத்தில் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக்கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

மதுராந்தகத்தில் நடக்கும் என்டிஏ கூட்டணி கூட்டத்தில் பிரதமர் என்ன பேசப்போகிறார் என நாடே உற்றுநோக்கிக் கொண்டிருக்கிறது.

என்டிஏ கூட்டணி பொபதுக்கூட்டத்தில் பிரதமர் பங்கேற்பதால் இயற்கையே இன்று சூரியனை மறைத்துவிட்டது.

நம்மை எதிர்ப்பவர்கள் தீயவர்களாக இருந்தாலும் உரியவர்களோடு ஒன்றிணைந்து

செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

திமுகவின் நான்கே முக்கால் ஆண்டு ஆட்சியில் மக்களுக்கு எஞ்சியது துன்பமும் வேதனையும் தான்.ஒரு குடும்பம் வாழ 8 கோடி மக்களை சுரண்டுவது நியாயமா? இந்த ஆட்சி அகற்றப்பட வேண்டும்.

திமுகவின் நான்கே முக்கால் ஆண்டு ஆட்சியில் அவர்களின் ஒரே சாதனை ஊழல், ஊழல், ஊழல் மட்டும் தான்.

இந்த தேர்தல் தான் திமுகவிற்கு இறுதித்தேர்தல், தீயச்சக்தி திமுகவை நீக்குவோம், எம்ஜிஆர், அம்மா கண்ட கனவை நிறைவேற்றுவோம்.

குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டும் தேர்தல், ஊழல் ஆட்சிக்கு முடிவு கட்டும் தேர்தல். வரும் சட்டமன்ற தேர்தலில் பெரும்பான்மையான இடங்களில் தேசிய ஜனநாயக கூட்டணி வெல்லும்.

அதிமுக ஆட்சியில் மத்திய அரசிடம் இருந்து நிதி பெற்று பல திட்டங்களை செயல்படுத்தினோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

வேலூரில் ICPF சார்பாக சீஷத்துவ பயிற்சி முகாம்

வேலூர்,ஜன.24: வேலூர் ICPF சார்பாக 14ம் தேதி முதல் 16ம் தேதி வரை துத்திப்பட்டு GOOD LIFE JESUS WITH US CHURCHல் சீஷத்துவ பயிற்சி முகாம் நடைபெற்றது. வேலூர் ICPF பொறுப்பாளர் சகோ. கண்ணப்பன் பயிற்சி முகாம் ஏற்பாடுகளை செய்திருந்தார்.

சகோ. Gunabalan Erode Staff Worker, சகோதரி.ரோஸ்லின் சகோ.Dr. Nelson Jeyakumar, சகோ. ஜெபராஜ், சகோ. செழியன், சகோ. எபி ஆகியோர் தேவ செய்தி & வேதபாடங்கள் & Group Discussion நடத்தினர். Pr பாபு & Team, Bro. God & Team, Bro. Arputha Immanuel Bro. Giftson ஆகியோர் பாடல் ஆராதனைகள் நடத்தினர். ஏறக்குறைய Teens - 20+ வாலிபர்கள் 15+ பெற்றோருடன் சிறுவர்கள் சேர்த்து - 50 மொத்தம் 85 பேர்களுக்கு மேலாக பங்கு பெற்றனர். இதில் 18 பேர் கல்லூரி மாணவ ஜெபக்குழு ஊழியத்திற்கும், 5 பேர் பகுதி நேர ஊழியத்திற்கும் ஒப்புக் கொடுத்தனர்.

11 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு

ரூ.14 லட்சம் கோடி நிதி அளித்துள்ளார் மோடி

நயினார் நாகேந்திரன்!

மதுராந்தகம், ஜன.24: செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி, அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ், பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் கூட்டணியில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கூட்டணி தலைவர்கள் அனைவரும் வரவேற்றுப் பேசிய நயினார் நாகேந்திரன்,

"மோடி சென்னைக்கு வந்ததும் சூரியன் மறைந்துவிட்டது.தேஜ.கூட்டணி கூட்டம் நடக்கிறது; சூரியன் இல்லவே இல்லை. இந்த இயக்கம் மாபெரும் இயக்கம். ஆட்சி மாற்றம் நிச்சயம் உறுதி. அதற்காக வேலையை பிரதமர் மோடியும், இபிஎஸ்-ம்

செய்துக் கொண்டிருக்கிறார்கள். திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றமுடியவில்லை. சனாதனத்தை ஒழிப்போம் எனக் கூறுகிறார்கள். முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஆட்சியை ஒழிக்க வேலை நடந்துகொண்டிருக்கிறது.

11 மருத்துவ கல்லூரிகளை தமிழ்நாட்டிற்கு தந்துள்ளார்கள். 11 வந்தே பாரத் ரயில்கள் தமிழ்நாட்டிற்கு கொடுத்துள்ளார். இந்த 11 ஆண்டுகளில் ரூ. 14 லட்சம் கோடி தமிழ்நாட்டிற்கு நிதி அளித்துள்ளார்" என தெரிவித்தார்.

இடைநிலை ஆசிரியர்கள் போராட்டத்தால் பள்ளி மாணவர்களின் கல்வி பாதிப்பு

அரசு நடவடிக்கை எடுக்க கோரிக்கை

சென்னை, ஜன.24: சம வேலைக்கு சம ஊதியம் கோரி இடைநிலை ஆசிரியர்களின் தொடர் போராட்டத்தால் தொடக்கப் பள்ளி மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக பெற்றோர் மற்றும் சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

சம வேலைக்கு சம ஊதியம் கோரிக்கையை முன்வைத்து இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர் இயக்கம் (எஸ்எஸ்டிஏ) சார்பில் தமிழகம் முழுவதும் கடந்த டிச.26-ம் தேதி முதல் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பெரும்பாலான ஆசிரியர்கள் பள்ளிக்கு செல்லாமல் வீடுகளில் இருந்தவாறு தங்களது ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் தொடர்ந்து 28-வது நாளாக சென்னை எழும்பூர் மற்றும் பூங்கா நகர் ரயில் நிலையம் அருகே இடைநிலை ஆசிரியர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை போலீஸார் கைது செய்து மாலையில் விடுவித்தனர்.

கல்வியாளர்கள், பெற்றோர் வலியுறுத்தல்: இந்த போராட்டம் ஒரு மாதத்தை நெருங்கும் சூழலில், தொடக்கப் பள்ளி மாணவர்களின் கற்றல், கற்பித்தல் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய சூழலில், பள்ளிகளில் கற்பித்தல் பணிகளில் தற்காலிக ஆசிரியர்கள் ஈடுபட்டு வந்தாலும் மாணவர்களின் நலன் கருதி இந்த பிரச்சினையை சுமுகமாக முடிவுக்கு கொண்டுவர தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கல்வியாளர்கள், பெற்றோர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843

Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்..
மாதமிருமுறை பக்தி இதழ்
www.arultharumdeivam.com
ManjalMart
ORDER
NOW
3
CALENDAR
RS.100
MANJALMART.COM
9337501889
7789941009

THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ...
Residential / Commercial ...
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget ⇨ We Show Your Home
Call :7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE
Digital
Marketing
Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF
SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK
GUARANTEE

Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599

Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com

Sri ManjalMart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash
& Detailing
* Car Foam Pressure Wash
* Teflon Coating
* Ceramic Wax Treatment
* Under Chassis Painting
* Interior Foam Wash / Stain Remover
* Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500
per day
Work From Home
Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000
per month
9337501889
7789941009

அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..

S.R
Call Drivers
Travels
Man Power & All Vehicle Available
24 Hours
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

Breaking
NEWS Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY

ADVERTISE
WITH US
CONTACT US
9438610756

Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009

கவிதை அரங்கம்!



சுறுசுறுப்பு
ஒருபோதும்
சந்திக்காது
தோல்வியை

கடந்த காலத்தை விட
அதிகம் பயன்படுத்தக்
கற்றுக்கொள்ளுங்கள்
நிகழ்காலத்தை

விதை கூட இங்கு
விழுந்துதான் எழுகிறது
தோல்விகள் கூட ஒரு
நாள் தோற்றுப் போகும்
நம்பிக்கை இருந்தால்

வெற்றி என்பது கதவு
போல் தட்டி பார்
திறக்கவில்லை எனில்
முட்டி பார் முட்டியும்
திறக்கவில்லை எனில்
தகர்த்து எரிந்து விடு

வாழ்க்கை தத்துவம்...

நீ வெற்றிக்குப் பின்னால்
ஓடிக்கொண்டு இருக்கையில்
பொறாமை கொள்ள நேரம் இருக்காது

பிறரின் உயரத்தை பார்க்கிறபோது
நீயும் ஏற பழக வேண்டும்

அமைதியாக வளரும் மரம்
தான் நிழலை பெரிதாக தரும்

நிஜ அன்பு பாராட்டும்
போலி அன்பு
பொறாமை காட்டும்

ஒவ்வொரு முயற்சியும்
வெற்றிக்கு ஒரு அடிக்கல்

நண்பன் !

அன்று ஞாயிற்றுக்கிக்கிழமை. வீட்டில் ரெஸ்ட் எடுத்துக்கொண்டிருந்தேன். நண்பன் கோவிந்தன் வீட்டினுள் நுழைந்தான்.அவன் முகம் படபடப்பில் காணப்பட்டது !

" நண்பா ! வெரி அர்ஜண்ட் ! ரெண்டு லட்சம் கைமாத்து வேணும். கட்டிட்கி ட்க்கிட்டிருக்குற வீட்டுக்கு நாளை வெதரிங் கோர்ஸ் போடறேன். டேட் ஃபிக்ஸ் பண்ணியாச்சு..ப்ளீஸ் நண்பா !" அவன் கெஞ்ச நான் திகைத்தேன்.

இதுவரை கோவிந்தன் அவ்வளவு பெரிய தொகை கேட்டது கிடையாது. ஐந்தாயிரமோ இல்ல பத்தாயிரமோ வாங்கியிருக்கிறான். சொன்ன தேதிக்கு முன்னாலயே பணத்தை திருப்பிக் கொடுத்திருக்கிறான். இவ்வளவு பெரிய தொகையை எப்படி திருப்பி செலுத்துவான் ! என் மனதில் குழப்பம் !

" என்ன நண்பா யோசிக்கறே ? உன்னை நம்பி வந்திருக்கிறேன். தயங்காமல் ஹெல்ப் பண்ணு நண்பா !"

" கோவிந்தா ! தொகை பெரிசா கேட்கிறே.உன்னால எப்படி திருப்பி கொடுக்கமுடியும் ?"

"உன் சந்தேகம் புரியுது நண்பா ! என் தந்தையின் பூர்விக பழைய வீடு ஒண்ணுகிராமத்தில இருக்கு. அதை எங்கண்ணன் விக்க முயற்சி பண்ணி க்கிட்டுருக்கான். ஒருமாசத்துக்குள்ள வித்துடுவோம்என் பங்குக்கு நிச்சயம் அஞ்சு லட்சம்வரும். வந்தவுடன்கொடு த்துடறேன் நண்பா ! "

நண்பனைப் பார்க்க பாவமாய் இரு ந்தது.அதோடு அவனின் கண்ணிய மும் நேர்மையும் நான் அறிந்ததே !

பேச்சை கிச்சனிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த மனைவி சுதா என்னை அழைத்தாள். நானும் எழுந்து சென்றேன்.

" இதோபாருங்க ! உங்க நண்பர் கேட்ட பணத்த தூக்கி கொடுத்துராதீங்க. பணம் திரும்பி வரலேன்னா நஷ்டம் அதிகம் !" என் காதில் கிசு கிசுத்தாள்.

" பாவம் கோவிந்தன் என்னை நம்பி வந்துட்டான்...அவன் நேர்மையா னவன். சொன்ன தேதிக்கு முன்னா லயே நம்மக்கிட்ட வாங்கிய பணத்த திருப்பிக் கொடுதிருக்கான். அதை மறந்துட்டியா சுதா?"

" அப்போ நீங்க தந்தது சின்ன தொகை!அதனால அவரால ஈஸியா திருப்பிக் கொடுக்க முடிஞ்சது. இப்போ அவர் ரெண்டு லட்சமில்ல கேட்கிறார் ?"

நான் புன்னகைத்தேன். " சுதா ! எப்படி திருப்பி கொடுக்கறதா அவன் பேசி னத நீ கேட்கல்லியா ?"

" ம்.ம்..கேட்டேன். எனக்கு என்னவோ நம்பிக்கை இல்ல."

"எனக்கு நம்பிக்கை இருக்கிறது . அவன் சொன்ன சொல் தவறமாட் டான்.நாணயமானவன். தயவுசெஞ்சு இந்த விஷயத்துல நீ குறுக்க வராதே ! " அவளைக்கடிந்தபடி வெளிப்பட்டேன்.

லீசுக்காக நிலத்தை கொடுத்த பணம் ரூபா மூணுலட்சம் நேற்று மாலை கிடைத்தது. அதிலிருந்து இரண்டு லட்சத்தை அறையிலிருந்த பீரோவி லிருந்து எடுத்துக் கொண்டு வெளி ப்பட்டேன்.

முகத்தைத் தொங்கப்போட்டவாறு அமர்ந்திருந்த நண்பன் கோவிந்தன் நான்பணத்தோடு வந்ததும் முகம் மலர்ந்தான்.

நான் கொடுத்த பணத்தை சந்தோஷ த்து பெற்றுக்கொண்டவன் தான் கொண்டுவந்திருந்த மஞ்சள் காட்டன் பைக்குள் வைத்தான்.

வாயெல்லாம் பல்லாக , " ரொம்ப நன்றி நண்பா ! நீ நேரத்துக்கு செய்த இந்த உதவியை நான் என்னிக்கும் மறக்கமாட் டேன்." என்றவன் கையோ டு வைத்திருந்த ஒரு வெள்ளைப் பேப்பரை எடுத்தான். என்னிடமிருந்து இன்ன தேதியில் இரண்டு லட்சம் பெற்றுக்கொண்டதுக்கான புரோ நோட் எழுதினான். பிறகு அடியில் ரெவின்யு ஸ்டாம்ப் ஒட்டி அதில் கையெழுத்திட்டான். அதை என்னி டம் நீட்டினான்.

" இதெல்லாம் எதுக்கு கோவி ந்தா !".நான் கேட்க அதற்கு அவன் " நண்பா ! முன்னால நீ கொடுத்தது சின்ன அமவுண்ட். அதை பெருசா எடுத்துக்கல்ல. ஆனால் இந்தத் தடவை தொகை பெரிசு. எல்லாம் ஒரு சேப்டிக்காகத்தான்..." என்றவன் எழுந்து நின்றான். மறுபடியும் நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டான் .

புரோநோட்டை வாங்கிபத்திரமாக ஒருபையில் பீரோவில் வைத்து மூடினேன்.

நாட்கள் ஓடின.

அன்று சுதா ஒரு மஞ்சள்நீராட்டு விழா விற்குப் போய்விட்டு பதற்றத்துடன் வீடு திரும்பினாள்.

" என்னங்க ! ஒரு விஷயம்தெரியுமா ?"

" இரு இரு " இடைமறித்து தொடர்ந் தேன்.

" நீ என் நணபன் கோவிந்தன்மேல் சந்தேகப்பட்டியே ! சொன்னபடி ரூபா ரெண்டு லட்சத்த கொண்டுவந்து கொடுத்துட்டான் !"

" என்னது...கொடுத்துட்டாரா.... எப்போ வந்து கொடுத்தார் ?" குரலில் பதற் றம் !

" அரைமணிக்கு முன்னால வந்திருந் தான். இரண்டு லட்சம் எண்ணி அதே மஞ்சள் பையில் போட்டு கொடுத் தான். வாங்கி பீரோலாக்கரில் வச்சே ன். அவன் எழுதிக்கொடுத்தபுரோநோ ட்டையும்.தன்கையாலயே கிழிச்சுப் போட்டுட்டான் " கொஞ்சம் கர்வத்து டன் கூறினேன்.

" நாசமாப் போச்சு ! ஒன்ஹுவர்முன்னா டியே உங்க நண்பர் அந்த கோவிந்தன் பைக் ஆகஸிடெண்ட்டுல சட்னியாகிட் டாராம் ! நீங்க என்னன்னா கதை?அளக்கறீங்க ! "

நான் அதிர்ச்சியுற்றேன் எழுந்துபோய் பீரோவைத்திறந்து லாக்கரைச் செக் பண்ணினேன். பணம் இல்லை. சந்தே கத்துடன் பையைத்திறந்துபார்த்ததில் கோவிந்தன் எழுதிக் கையொப்பமிட்ட புரோரோட் என்னைப் பார்த்து சிரித் தது!

சே! ஒருகணம் கண் அசந்த சமயம் வந்த கனவில் தோன்றிய நிகழ்வு உண்மையை உறைக்க வைக்க இடிந்து போனேன் !

வி.கே. லக்ஷ்மிநாராயணன்

சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

காதலன் : நம்ம காதலை மெதுவா எங்க வீட்டில் சொல்லிட்டேன்.

காதலி : அவங்க என்ன சொன்னாங்க, ஒத்துக்கிட்டாங்களா?

காதலன் : மெதுவா சொன்னதால அவங்களுக்கு கேட்கலை...

காதலி : !!!!

தினம் ஒரு சமையல்

மட்டன் ஸ்டூ

தேவையான பொருட்கள்:

மட்டன்	- அரை கிலோ
காலிபிளவர்	- 100 கிராம்
பச்சை பட்டாணி	- 100 கிராம்
இஞ்சி, பூண்டு விழுது	- 2 டீஸ்பூன்
வெங்காயம்	- 200 கிராம்
பட்டை	- 2
லவங்கம்	- 2
தேங்காய்ப் பால்	- 2 கப்
கேரட்	- 100 கிராம்
பச்சை மிளகாய்	- 6
எண்ணெய்	- 2 குழிக்கரண்டி
உப்பு	- தேவையான அளவு

செய்முறை:

1. மட்டன் மற்றும் காய்கறிகளை நன்றாக சுத்தம் செய்து நறுக்கி கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், பட்டை, லவங்கம் சேர்த்து தாளிக்கவும். அதனுடன் நறுக்கிய வெங்காயத்தையும் சேர்த்து நன்றாக வதக்கவும்.

2. மட்டன், காய்கறிகளைச் சேர்த்து, இடித்த பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு விழுது, தேவையான அளவு உப்பு சேர்க்கவும். போதுமான அளவு நீர் ஊற்றி மட்டன் மற்றும் காய்கறிகளை வேக விடவும்.

3. கலவை வெந்து சுண்டிய பிறகு, தேங்காய்ப்பால் ஊற்றி சிறிது நேரத்தில் இறக்கவும். ஆப்பம், இடியாப்பம், தோசை ஆகியவற்றிற்கு இந்த 'ஸ்டூ' தொட்டுக் கொள்ள சுவையாக இருக்கும்.

பிராய் மரம் பயன்கள்

மரங்களின் வரங்கள்!: புற்றுநோய் தீர்க்கும் - பிராய் மரம்

நான் தான் பராய் மரம் பேசுகிறேன். என் அறிவியல் பெயர் ஸ்டிரேபிளஸ் ஆஸ்பெர் என்பதாகும். நான் மொராசியே குடும்பத்தைச் சேர்ந்தவன். நான் வெள்ளை நிற மரம். நான் கரும்பச்சை நிறத்தோடு புதர்க் காடுகளில் காணப்படுவேன். எனக்கு பிறா மரம், குட்டிப் பலா என வேறு பெயர்களும் உண்டு.

ஒரு காலத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருப்பராய்த்துறை என்னும் ஊரில் நான் இல்லாத இடமே இல்லை. நான் என்னத்த சொல்ல, இன்று என்னை தேடி தான் கண்டுப்பிடிக்க வேண்டியிருக்கு. எனக்கு கணுக்கள் அதிகமாக இருக்கும். பிராய் மரத்தின் கணுவைப் போன்று மனம் வலிமையுடையதாக இருக்க வேண்டும் என்பர். எனவே தான், மாணிக்கவாசகரும் திருவாசகத்தில் "வன்பராய் முருடொக்கும் என் சிந்தை' என்கிறார். அதாவது, "என் மனமானது வலிய பராய் மரத்தின் கணுப் போன்றது' என்கிறார்.

என்னிடம் மருத்துவப் பண்புகள் அதிகமாக இருக்கு. என்னுடைய இலைகளையும், பட்டைகளையும், வேர்களையும் சேர்த்து சூரணமாக்கி பாலில் கலந்து ஒரு கிராம் அளவுக்கு இரண்டு வேளை உண்டு வந்தால் எலிக்கடி, சிராய் போல உடலில் உண்டாகும் சுரசுரப்பு குணமாகும்.

என் பாலை பித்த வெடிப்பு ஏற்பட்ட இடத்தில் தடவி வந்தால் விரைவில் வெடிப்பு குணமாகும். என் இலைகளைப் பொடி செய்து மோரில் கலந்து குடித்து வந்தால் பேதி கட்டுப்படும்.

குழந்தைகளை, நான் சொல்வதை கேளுங்க, குறிப்பாக தீராத நோயாக கருதப்படும் புற்று நோய்க்கு நான் அருமருந்தாக இருக்கிறேன். என் இலைகளிலிருந்து எடுக்கப்படும் வலாட்டைல் எனப்படும் எண்ணெய் புற்றுநோய் தீர்க்கும் மருந்து என அறிவியலாளர்கள் மெய்ப்பித்துள்ளனர். இந்த எண்ணெய்யில் பைட்டால், பார்நசீன், டிரான்ஸ் பார்நசைல் அசிடேட், கார்யோபைலின் மற்றும் டிராஸ்-டிரான்ஸ் பார்னசீன் ஆகிய வேதிப்பொருள்கள் உள்ளது. இந்த எண்ணெய் இரத்தப் புற்றுநோயை குணப்படுத்த வல்லது. என் மரத்தின் பட்டையுடன் மஞ்சள் சேர்த்து அரைத்துத் தோலில் உள்ள நோய்களுக்குப் போட்டால் தோல் நோய் குணமாகும். மின்னலைத் தாக்கும் விருட்சம் என்றும் என்னை சொல்வார்கள். நான் இருக்கும் இடத்தில் 5 கி.மீ சுற்றளவுக்கு இடி, மின்னல் உங்களைத் தாக்காது. நான் திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருப்பராய்த்துறை அருள்மிகு தாருகாவனேஸ்வரர் திருக்கோவில் தலவிருட்சமாக இருக்கிறேன். சித்தர்கள் கூற்றுப்படி என்னை வணங்கி வழிபட்டால் புற்றுநோய்கள் குணமாகும். மரங்களை வளர்த்தால் மழை பொழிந்து மனித இனத்துக்கு வளம் சேர்க்கும். உயிரினங்களுக்கு உதவிகள் பல செய்து, தான் வாழ்ந்தும் மற்றவர்களையும் வாழ வைக்கும் மரங்களை வளர்ப்பதும், பாதுகாப்பதும் உங்களின் தலையாய கடமை. இனி ஒரு விதி செய்வோம். அதில் வீதி எங்கும் மரம் வளர்ப்போம். என் நட்சத்திரம் கேட்டை. நன்றி, குழந்தைகளே, மீண்டும் சந்திப்போம்.

2026 பொங்கல் வின்னர் யார்..? உண்மையை கூறிய பிரபல விநியோகஸ்தர்..

2026ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு பல்வேறு மொழிகளிலிருந்து பல திரைப்படங்கள் வெளிவந்தன. இதில் தமிழில் பராசக்தி, வா வாத்தியார், தலைவர் தம்பி தலைமையில் ஆகிய படங்கள் வெளிவந்தது.

இதில் சிவகார்த்திகேயன் நடித்த பராசத்தி படத்திற்கு கலவையான விமர்சனங்கள் கிடைத்தன. ஆனாலும் உலகளவில் ரூ. 100 கோடி வசூல் செய்ததாக படக்குழுஅறிவித்தது. இதன்பின் வெளிவந்த வா வாத்தியார் படத்திற்கு கலவையான விமர்சனங்கள் கிடைத்தை பார்த்தோம்.

ஆனால், இதை தொடர்ந்து வெளிவந்த தலைவர் தம்பி தலைமையில் படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்தது.

எப்போதுமே பொங்கல் பண்டிகை அன்று வெளிவரும் படங்களில் எந்த படம் பந்தயம் அடித்தது என்கிற கேள்வி ரசிகர்கள் மத்தியில் எழும். அந்த வகையில் இந்த ஆண்டு எந்த படம் பொங்கல் வின்னர் என்பது குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, பராசக்தி, வா வாத்தியார் மற்றும் தலைவர் தம்பி தலைமையில் (TTT) ஆகிய மூன்று படங்களில் தலைவர் தம்பி தலைமையில் படம்தான் 2026 பொங்கல் வின்னர் ஆகியுள்ளது. இந்த தகவலை பிரபல விநியோகஸ்தர் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சினிமா

சிவப்பு நிற உடையில் தான் எடுத்துக்கொண்ட லேட்டஸ்ட் போட்டோ ஷூட்டை தனது இன்ஸ்டா கிராமில் பதிவிட்டுள்ளார். ஜனனி தற்போது வெளியிட்டுள்ள போட்டோஸ் இதோ..

நடிகர் பிரபாஸ் நடித்த ராஜா சாப் படத்தால் ஏற்பட்ட நஷ்டம்... எவ்வளவு கோடிகள் தெரியுமா

இயக்குநர் மாருதி இயக்கத்தில் பிரபாஸ் நடிப்பில் உருவாகி பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெளிவந்த திரைப்படம் ராஜா சாப்.

இப்படத்தில் பிரபாஸ் உடன் இணைந்து நிதி அகர்வால், மாளவிகா மோகனன், ரிதி குமார் ஆகியோர் நடித்திருந்தனர். பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு வெளிவந்த இப்படம் படுதோல்வியை சந்தித்துள்ளது.

பிரபாஸ் இதற்கு முன் ஆதி புருஷ் என்கிற படத்தில் நடித்திருந்தார் என்பதை நாம் அறிவோம். இப்படத்தின் தோல்வியின் காரணமாக ரூ. 50 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அந்த நஷ்டத்தை சரிசெய்யதான் ராஜா சாப் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார்.

ஆனால், தற்போது ராஜா சாப் படமும் படுதோல்வியடைந்த நிலையில், ரூ. 150 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இது பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

இப்படியொரு தகவல் திரையுலக வட்டாரத்தில் உலா வருகிறது. ஆனால், இது எந்த அளவிற்கு உண்மை என்று தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கண்ணனின் மனதில் நின்ற சகுனி....

அபிமன்யுவின் மனைவி உத்தரைக்கு முனிவர் ஒருவர், மாயக்கண்ணாடி ஒன்றை பரிசாக வழங்கினார். அந்தக் கண்ணாடி முன் ஒருவர் வந்து நின்றால், அவர் மனதில் யார் இருக்கிறாரோ, அவர் அதில் தெரிவார். உத்தரையே முதலில் அதை சோதனை செய்தாள். திருமணமானதில் இருந்து, அவளது அன்புக்கணவன் அபிமன்யுவைத் தவிர அவளது உள்ளத்தில் வேறு யாருமில்லை. எனவே, அபிமன்யு கண்ணாடியில் தெரிந்தான்.

அபிமன்யுவும், மனைவி மீது தீராக்காதல் கொண்டிருந்தான். அவனை கண்ணாடி முன்னால் நிறுத்தினர். அப்போது, உத்தரை அதில் தெரிந்தாள். அந்த சமயத்தில் மாயக்கண்ணன் அங்கு வந்தார். அவர் மனசுக்குள் யார் இருக்கிறார் என்று பார்க்க எல்லாருக்கும் ஆசை.

அர்ஜுனன் என்னை விட்டால் யார் இருப்பார்? எனச் சொல்ல, போடா! அவன் மனதில் நான் தான் இருப்பேன், என பீமன் வம்புக்குப் போக, இருவருமே இல்லை! நான் தான் இருப்பேன், என தர்மர் பிடிவாதமாய் சொன்னார்.

ஏன்... அவனது தந்தை வசுதேவனின் தங்கையான நானல்லவா இருப்பேன், என மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் குந்தி.

எல்லாரும் ஆர்வமாயினர். கண்ணனைக் கையைப் பிடித்து இழுக்காத குறையாக கண்ணாடி முன் கொண்டு வந்து நிறுத்தினர். என்ன ஆச்சரியம்! யாருக்கு கண்ணனை அறவே பிடிக்காதோ, யாரொருவன் கண்ணனைக் கொல்ல திட்டமிட்டிருக்கிறானோ அந்த சகுனி கண்ணாடியில் தெரிந்தான். கண்ணா! மாயம் செய்கிறாயா? என அனைவரும் ஒரே நேரத்தில் கேட்டனர்.

இல்லை.. இல்லை... என்னைக் கொன்றே தீர வேண்டுமென தூக்கத்தில் கூட என்னையே சிந்தித்துக் கொண்டிருக்கிறான் சகுனி. என்னை எப்படி எண்ணுகிறார்கள் என்பது முக்கியமல்ல! கணநேரமும் என்னை மறவாதவர்கள் என் இதயத்தில் இருக்கிறார்கள், என்றான் கருணையுள்ள கண்ணன்.

இறைவனை எப்போதும் மனதார நினைத்துக் கொண்டிருக்கும் ஒருவரை, இறைவன் எப்போதும் கைவிடாது தன் மனத்தில் வைத்துக் கொள்கிறார்.

சிவசக்தி
நாப்பிராம்பட்டி
ஊத்தங்கரை
கிருஷ்ணகிரி மாவட்டம்

தினம் ஒரு தலைவர்கள்

கேளப்பன் நாயர் வரலாறு

கோயப்பள்ளி கேளப்பன் நாயர் (24 ஆகஸ்ட் 1889 – 7 அக்டோபர் 1971) ஒரு இந்திய அரசியல்வாதி, சுதந்திர ஆர்வலர், கல்வியாளர் மற்றும் பத்திரிகையாளர் ஆவார். இந்திய சுதந்திர இயக்கத்தின் போது, அவர் கேரளாவில் இந்திய தேசிய காங்கிரஸின் முன்னணி நபராக இருந்தார் , மேலும் கேரள காந்தி என்று பிரபலமாக அறியப்பட்டார். இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு, அவர் காந்திய அமைப்புகளில் பல்வேறு பதவிகளை வகித்தார். அவர் நாயர் சேவை சங்கத்தின் இணை நிறுவனர் மற்றும் முதல் தலைவராகவும் , கேரள க்ஷேத்திர சம்ரக்ஷண சமிதியின் (கோயில் பாதுகாப்பு இயக்கம்) நிறுவனராகவும் இருந்தார். ஆரம்ப கால வாழ்க்கை கேரள மாநிலம் கோழிக்கோட்டில் உள்ள கோயிலாண்டியில் உள்ள முச்சுகுன்னு என்ற சிறிய கிராமத்தில் , நீதிமன்றத்தில் எழுத்தராகப் பணியாற்றிய தென்போயில் கனாரன் நாயர் மற்றும் கோயப்பள்ளி குஞ்சம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார் கேளப்பன். கேளப்பனுக்கு தாய்வழி வாரிசுரிமை மூலம் கோயப்பள்ளி என்ற குடும்பப் பெயர் கிடைத்தது . அவர் கோழிக்கோடு மற்றும் சென்னையில்



கல்வி பயின்றார், மேலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார், பின்னர் சங்கனாசேரியில் உள்ள செயிண்ட் பெர்ச்மன்ஸ் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார் . கேளப்பன் நாயர் சேவை சங்கத்தின் நிறுவனத் தலைவராக இருந்தார் , பின்னர் அந்த சங்கத்தால் நடத்தப்படும் ஒரு பள்ளியின்

முதல்வரானார். சீர்திருத்தவாதியாக ஒருபுறம் சமூக சீர்திருத்தங்களுக்காகவும் மறுபுறம் ஆங்கிலேயர்களுக்காகவும் அவர் போராடினார். தீண்டாமை மற்றும் சாதி அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு எதிராக அவர் இடைவிடாமல் போராடினார். கே. குமாருடன் சேர்ந்து , கேரளாவில் சாதி நிலையைக் குறிக்கும் தனது பெயருக்குப் பின்னொட்டை நீக்கிய முதல் நபரானார். அவர் கேரள காந்தி என்று அழைக்கப்பட்டார்.

அனைத்துப் பிரிவு மக்களின் சமத்துவத்திற்காகவும் கேளப்பன் அயராது பாடுபட்டார். வைக்கம் சத்தியாக்கிரக இயக்கத்தில் அவர் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார், பின்னர் 1932 இல் குருவாயூர் சத்தியாக்கிரகத்தை வழிநடத்தினார். கோயில் நுழைவு பிரகடனத்தை நினைவுகூரும் வகையில் காந்தி திருவிதாங்கூருக்கு விஜயம் செய்தபோது , காந்திஜியின் தலைமையிலும், சமூக சமத்துவத்திற்கான நடவடிக்கையின் உணர்வை மொழிபெயர்க்க காந்திய அணுகுமுறைக்கு இணங்க எடுக்கப்பட வேண்டிய முன்னோக்கிய நடவடிக்கைகளிலும் நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்டும் மிக முக்கியமான தீர்மானத்தை அவர் ஆதரித்தார். வைக்கம் சத்தியாக்கிரகத்தின் தலைவர்களில் ஒருவரான திருவிதாங்கூரை சேர்ந்த கே. குமார் இந்தத் தீர்மானத்தை முன்வைத்தார் , பின்னர் மக்களாலும் வரலாற்றாசிரியர்களாலும் மறக்கப்பட்டார். சுதந்திரத்திற்குப் பிந்தைய பங்கு சுதந்திரத்திற்குப் பிறகு அவர் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறினார். அவர் கிசான் மஸ்தூர் பிரஜா கட்சியில் சேர்ந்தார் மற்றும் 1952 இல் பொன்னானி மக்களவைத் தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தனது பதவிக் காலத்தின் முடிவில், அவர் தீவிர அரசியலை விட்டுவிட்டு சர்வோதய ஊழியரானார் மற்றும் கேரளாவில் பூதான் இயக்கத்துடன் தீவிரமாக தொடர்புடையார். கேளப்பன் மாத்ருபூமியைத் தொடங்க உதவினார் , மேலும் பல ஆண்டுகள் அதன் ஆசிரியராகவும் இருந்தார். கேரளாவை ஒரு புதிய மொழியியல் மாநிலமாக ஒன்றிணைக்க அவர் பாடுபட்டார். கேரள சர்வோதய சங்கம், கேரள காந்தி ஸ்மாரக் நிதி, கேரள சர்வோதய மண்டல் மற்றும் கோழிக்கோடு காந்தி அமைதி அறக்கட்டளை உள்ளிட்ட பல காந்திய அமைப்புகளின் தலைவராகவும் இருந்தார். கேரளாவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மலப்புரம் மாவட்டம் உருவாவதை கேளப்பன் எதிர்த்தார், அது ஒரு 'மினி பாகிஸ்தானை' உருவாக்கும் என்று வாதிட்டார். மலப்புரத்தில் உள்ள அங்கடிப்புரத்தில் உள்ள ஒரு மசூதிக்கு அருகில் ஒரு கோயில் மறுமலர்ச்சியை நோக்கமாகக் கொண்ட தாலி கோயில் இயக்கத்தில் அவர் ஈடுபட்டார், இது சில வகுப்புவாத பதட்டங்களை ஏற்படுத்தியது. தாலி கோயில் இயக்கத்தில் கேளப்பன் முக்கிய பங்கு வகித்தார். ஆனால் அது நிறைவடைவதற்கு முன்பே, அக்டோபர் 7, 1971 அன்று கேளப்பன் இறந்தார். அவரது ஆதரவுடன் கட்டப்பட்ட கோயில் மசூதியுடன் இணைந்து நிற்கிறது, இது வெவ்வேறு சமூகங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தைக் குறிக்கிறது.

விருதுகள் மற்றும் அங்கீகாரம் அவரது நினைவாக இந்தியா போஸ்ட் 1990 இல் ஒரு நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டது .

ஊதிய ஊரக வேலைச் சட்டத்துக்கு எதிராக ஏழைகள் ஒன்று திரள வேண்டும் - ராகுல் காந்தி

புதுடெல்லி, ஜன.24:

டில்லியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட ஊழியர்களின் தேசிய மாநாடு காங்கிரஸ் சார்பில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்றுப் பேசியதாவது:

வேலை தேவைப்படுவோருக்கு வேலை அளிப்பதே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் சாராம்சம். அந்தத் திட்டம் அரசின் 3 அமைப்புகளாலும், பஞ்சாயத்து அமைப்புகளாலும் செயல்படுத்தப்பட்டது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் அனைத்து ஏழைகளும் வேலை செய்ய உரிமை அளிக்கப்பட்டிருந்தது. இதனால் பிரதமர் மோடியும், பாஜகவும் அந்தத் திட்டத்துக்கு முடிவு கட்ட விரும்பினர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு மூன்று கருப்பு வேளாண் சட்டங்களை அவர்கள் கொண்டு வந்தனர். விவசாயிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து, மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து அந்தச் சட்டத்தை தடுத்து நிறுத்தினர். விவசாயிகளுக்கு எதிராகச் செயல்பட்டது போலத்தான், தற்போது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைத் திட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகவும் மத்திய அரசு செயல்படுகிறது.

புதிய சட்டத்தின் மூலம், பாஜக ஆளும் மாநிலங்களுக்கு வேலை மற்றும் நிதி ஒதுக்கீடு செய்வதில் முன்னுரிமை கொடுக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அவர்கள் (பாஜக) சொத்துகள் அனைத்தும் சிலரிடம் மட்டுமே இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். அப்படி இருந்தால், ஏழை மக்கள் அதானி- அம்பானியை சார்ந்திருப்பர். இதுதான் அவர்கள் விரும்பும் இந்தியா.

புதிய சட்டத்தின் பெயரை என்னால் நினைவுபடுத்தவே இயலவில்லை. உங்களுக்காவது (மாநாட்டில் கலந்து கொண்டோர்) புதிய சட்டத்தின் பெயர் நினைவுக்கு வருகிறா?. அரசமைப்புச் சட்டம் மற்றும் தேசத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ள ஏழைகளுக்கு இந்த இயக்கம் புதிய வாய்ப்பாகும். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால், மோடி பின்வாங்கிவிடுவார். மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம் மீண்டும் கொண்டு வரப்படும் என்றார் ராகுல்.

அயோத்தி ராமர் கோயிலுக்கு 286 கிலோ தனுசு காணிக்கை!

புதுடெல்லி, ஜன.24:

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தி ராமர் கோயிலில் ராமர் சிலை, கடந்த ஜனவரி 22, 2024-ல் பிராண பிரதிஷ்டை செய்யப்பட்டு 2 வருடங்கள் நிறைவு பெற்றுள்ளன. இதையெட்டி, 286 கிலோ எடையுள்ள தனுசு (வில்) நேற்று அயோத்திக்கு வந்து சேர்ந்தது. இது, ராமர் கோயிலுக்கு காணிக்கையாக, ஒடிசாவின் சனாதன ஜாக்ரன் மஞ்ச் சார்பில் அளிக்கப்பட்டுள்ளது.

இது, தமிழ்நாட்டின் கோயில் நகரமான காஞ்சிபுரத்தின் 48 பெண் கைவினை கலைஞர்களால் பஞ்சலோகத்தில் செய்யப்பட்டதாகும். இந்த தனுசை, ஸ்ரீராம ஜென்மபூமி அறக்கட்டளையின் பொதுச் செயலாளரான சம்பக் ராய், உரிய சடங்குகள் மற்றும் சம்பிரதாய முறையில் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில், ஸ்ரீராம ஜென்மபூமி அறக்கட்டளை அதிகாரிகள், துறவிகள் மற்றும் பக்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இது குறித்து சனாதன ஜாக்ரன் மஞ்சைச் சேர்ந்த சந்தோஷ் குமார் பிஸ்வாஸ் கூறும்போது, 'இந்த பிரம்மாண்ட கோதண்டத்தைக் கண்ட அனைவரும் அதன் பிரம்மாண்டம், கலைத் திறன் மற்றும் தெய்வீகத் தன்மையைக் கண்டு மெய்சிலிர்த்தனர். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கோதண்டத்துடனான ஊர்வலம் ஒடிசாவின் 30 மாவட்டங்கள் வழியாகச் சென்றது.

பக்தர்கள் பல்வேறு இடங்களில் மலர் தூவி, மேளதாளங்கள் முழங்க, 'ஜெய் ஸ்ரீ ராம்' என்ற கோஷங்களுடன் பக்தியுடன் கோதண்டத்தை வரவேற்றனர். இந்த ஊர்வலம் ஒரு மத யாத்திரையாக மட்டுமல்லாமல், சனாதன கலாச்சாரம் மற்றும் தேசிய ஒற்றுமையின் சின்னமாகவும் மாறியது' என்றார்.

பிரேஸில் அதிபருடன் பிரதமர் மோடி தொலைபேசியில் பேச்சு

புதுடெல்லி, ஜன.24:

பிரேஸில் அதிபர் லூலா டி சில்வாவுடன் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி வாயிலாக வியாழக்கிழமை கலந்துரையாடினார்.

அப்போது தெற்குலகில் இந்தியா-பிரேஸில் இடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து இருவரும் ஆலோசித்தனர். இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'பிரேஸில் அதிபர் லூலா டி சில்வாவுடன் கலந்துரையாடியதில் மகிழ்ச்சி. இந்தியா-பிரேஸில் இடையேயான இருதரப்பு உறவை பன்மடங்கு மேம்படுத்துவது குறித்து இருவரும் விவாதித்தோம். தெற்குலகின் தேவைகளை பூர்த்திசெய்ய இருநாடுகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். அதிபர் லூலா டி சில்வாவை இந்தியாவில் வரவேற்க காத்திருக்கிறேன்' என குறிப்பிட்டார்.

இண்டிகோ லாபம் 78% சரிவு

புதுடெல்லி, ஜன.24:

நாட்டின் மிகப்பெரிய விமான சேவை நிறுவனமான இண்டிகோவும் மூன்றாவது காலாண்டு நிகர லாபத்தில் சரிவைச் சந்தித்துள்ளது. கடந்த 2024, டிசம்பர் காலாண்டில் ரூ.2,448.8 கோடியாக இருந்த நிகர லாபம், இந்த ஆண்டு அதே காலாண்டில் வெறும் ரூ.549.1 கோடியாகக் குறைந்துள்ளது. இது 78 சதவீத வீழ்ச்சியாகும். வருவாய் ரூ.24,541 கோடியாக உயர்ந்த போதிலும், கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட சேவைக் குறைப்பு குளறுபடியால் லாபம் குறைந்தது. விமானச் சேவைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டதால், இண்டிகோவின் 10 சதவீத விமானங்களை ரத்து செய்ய டிஜிசிஏ உத்தரவிட்டது. இந்தக் கட்டுப்பாடு வரும் பிப். 10 வரை நீடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

விரும்பும் நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்புக்கு இந்தியா தயார் - அஸ்வினி வைஷ்ணவ்

புதுடெல்லி, ஜன.24:

'உலகெங்கிலும் விரும்பும் நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பை மேற்கொள்ள இந்தியா தயாராக உள்ளது. இந்தியாவுடன் இணைந்து எதிர்காலத்துக்கு பங்காற்றுங்கள்' என்று மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை, மின்னணு மற்றும் தகவல்தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அழைப்பு விடுத்தார்.

ஸ்விட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்றுவரும் உலக பொருளாதார அமைப்பின் ஆண்டு கூட்டத்துக்கு பல்வேறு மாநில முதல்வர்கள், மத்திய அமைச்சர்கள் கொண்ட குழுவை வழிநடத்திச் சென்றுள்ள அஸ்வினி வைஷ்ணவ், அங்கு அளித்த பேட்டியில் இக் கருத்தைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

கடந்த 11 ஆண்டுகளாக இந்திய பொருளாதாரம் உலகளாவிய பங்கேற்புக்கு திறந்துவிடப்பட்டுள்ளதன் மூலம் எந்த அளவுக்கு சிறந்த மாற்றங்களை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது என்ற தெளிவான தகவலை டாவோஸ் மாநாட்டில் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளோம். விரும்பும் நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பை மேற்கொள்ள இந்தியா தயாராக உள்ளது. உலக நாடுகளின் புதிய சிந்தனைகள், யோசனைகளையும் ஏற்க இந்தியா தயாராக உள்ளது.

குறைமின் கடத்தி உற்பத்தி, செயற்கை நுண்ணறிவு, பசுமை எரிசக்தி உள்பட பிற துறைகளிலும் விரும்பும் நாடுகளுடன் ஒத்துழைப்பை மேற்கொள்ள இந்தியா விருப்பம் கொண்டுள்ளது என்றார்.

ஜம்மு காஷ்மீரில் 200 அடி பள்ளத்தில் ராணுவ வாகனம் கவிழ்ந்து 10 வீரர்கள் உயிரிழப்பு

ஜம்மு, ஜன.24:

ஜம்மு காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் 200 அடி ஆழ பள்ளத்தில் ராணுவ வாகனம் கவிழ்ந்த விபத்தில் 10 வீரர்கள் உயிரிழந்தனர். 11 வீரர்கள் காயம் அடைந்தனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஜம்மு காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்காக ராணுவ வாகனம் ஒன்று நேற்று சென்று கொண்டிருந்தது. குண்டு துளைக்காத இந்த வாகனத்தில் 20-க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் இருந்தனர். இந்நிலையில் பதேர்வா-சம்பா சாலையில், 9,000 அடி உயரம் உள்ள கன்னி டாப் பகுதியில் செல்லும்போது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த வாகனம், 200 அடி ஆழமுள்ள பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் அந்த வாகனம் உருக்குலைந்தது. விபத்து குறித்து ராணுவத்தின் ஒயிட்நைட் படைப் பிரிவு வெளியிட்டுள்ள 'எக்ஸ்' பதிவில், 'ஒரு ராணுவ நடவடிக்கைக்காக துருப்புகளை ஏற்றிச் சென்ற வாகனம் தோடாவில் ஆபத்தான நிலப்பரப்பில் பயணித்தபோது மோசமான வானிலை காரணமாக சாலையில் இருந்து தவறிவிழுந்தது' என்று கூறப்பட்டுள்ளது.

விபத்தை தொடர்ந்து சம்பவ இடத்தில் ராணுவம் மற்றும் காவல் துறையினர் உடனடியாக மீட்புப் பணிகளை தொடங்கினர். இதில் 4 வீரர்கள் சடலமாகவும் 17 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். காயம் அடைந்தவீரர்கள் பதேர்வா அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இங்கு சிகிச்சை பலனின்றி 6 பேர் உயிரிழந்தனர். இதனால் விபத்தில் உயிரிழந்த வீரர்கள் எண்ணிக்கை 10 ஆகஉயர்ந்தது. 11 வீரர்கள் உயர் சிகிச்சைக்காக உதம்பூர் ராணுவ மருத்துவமனைக்கு ஹெலிகாப்டர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

தலைவர்கள் இரங்கல்: விபத்து குறித்து பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், அமித் ஷா, ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, முதல்வர் உமர் அப்துல்லா, முன்னாள் முதல்வர்கள் குலாம் நபி ஆசாத், மெகபூபா முப்தி, காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், 'தோடாவில் நடந்த துயரச் சம்பவத்தால்மிகுந்த வேதனை அடைந்துள்ளேன். இதில் நமது துணிச்சலான ராணுவ வீரர்கள் சிலரை நாம் இழந்துவிட்டோம். தேசத்துக்கு அவர்கள் ஆற்றிய சேவை என்றென்றும்நினைவுகூரப்படும். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து உதவிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன' என்று தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் அமித்ஷா 'எக்ஸ்' சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "ஜம்மு காஷ்மீரின் தோடா பகுதியில் நடந்த சாலை விபத்தால் மிகுந்த வேதனை அடைந்துள்ளேன். என்று தெரிவித்துள்ளார்.

இண்டிகோ லாபம் 78% சரிவு

புதுடெல்லி, ஜன.24:

நாட்டின் மிகப்பெரிய விமான சேவை நிறுவனமான இண்டிகோவும் மூன்றாவது காலாண்டு நிகர லாபத்தில் சரிவைச் சந்தித்துள்ளது. கடந்த 2024, டிசம்பர் காலாண்டில் ரூ.2,448.8 கோடியாக இருந்த நிகர லாபம், இந்த ஆண்டு அதே காலாண்டில் வெறும் ரூ.549.1 கோடியாகக் குறைந்துள்ளது. இது 78 சதவீத வீழ்ச்சியாகும். வருவாய் ரூ.24,541 கோடியாக உயர்ந்த போதிலும், கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட சேவைக் குறைப்பு குளறுபடியால் லாபம் குறைந்தது. விமானச் சேவைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டதால், இண்டிகோவின் 10 சதவீத விமானங்களை ரத்து செய்ய டிஜிசிஏ உத்தரவிட்டது. இந்தக் கட்டுப்பாடு வரும் பிப். 10 வரை நீடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

எஸ்ஐஆர் மன அழுத்தத்தால் 110 பேர் இறப்பு - மம்தா குற்றச்சாட்டு

கொல்கத்தா, ஜன.24:

மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் 49-ஆவது புத்தக கண்காட்சியை வியாழக்கிழமை தொடங்கிவைத்தார். அப்போது அவர் பேசியதாவது: மேற்கு வங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட எஸ்ஐஆர் நடவடிக்கையில் முரண்பாடான தகவல்களை வழங்கியதாக வகைப்படுத்தி சிலரிடம் அடையாள ஆவணங்களை இந்திய தேர்தல் ஆணையம் கோரியுள்ளது. நான் பிறந்த தேதி குறித்து விளக்கமளிக்க என்னிடம் பத்தாம் வகுப்புமதிப்பெண் சான்றிதழ் உள்ளது. ஆனால் முந்தைய தலைமுறையை சேர்ந்த பலரிடமும் முறையான ஆவணங்கள் இருக்க வாய்ப்பில்லை. அவர்களை நீண்ட வரிசையில் தேர்தல் ஆணையம் காத்திருக்க வைப்பது வருத்தமளிக்கிறது. இவ்வாறு எஸ்ஐஆர் நடவடிக்கையால் ஏற்பட்ட மன அழுத்தம் மற்றும் அச்சம் காரணமாக மாநிலத்தில் 110 பேர் உயிரிழந்துவிட்டனர். எஸ்ஐஆர் நடவடிக்கையால் மக்கள் படும் துயரங்களை 26 கவிதைகளாக தொகுத்துள்ளேன். இந்த நூல் புத்தக கண்காட்சியில் இடம்பெறவுள்ளது. இது என்னுடைய 162-ஆவது நூலாகும் என்றார்.

ஏர் இந்தியாவுக்கு ரூ.15,000 கோடி நஷ்டம்? அகமதாபாத் விபத்து, வான்வழித் தடையால் பின்னடைவு

புதுடெல்லி, ஜன.24:

அகமதாபாத் விமான விபத்து மற்றும் அண்டை நாடுகளின் வான்வழிப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் காரணமாக, இந்த ஆண்டு மட்டும் நிறுவனத்துக்கு சுமார் ரூ.15,000 கோடி இழப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நஷ்டத்திலிருந்து மீண்டு, லாபத்தை நோக்கி நகர கடந்த சில ஆண்டுகளாக ஏர் இந்தியா பல முயற்சிகளை எடுத்து வந்தது. இந்த நிதியாண்டில் 'லாபமும் இல்லை; நஷ்டமும் இல்லை' என்ற சமநிலையை அடைந்துவிடலாம் என்று அதன் உரிமையாளர்கள் நம்பியிருந்தனர். ஆனால், கடந்த ஜூன் மாதம் அகமதாபாதில் 240-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த விமான விபத்து, அந்த நம்பிக்கையைத் தகர்த்துவிட்டது.

பாகிஸ்தான் தடையால் கூடுதல் சுமை: முன்னதாக, எல்லைப் பதற்றம் காரணமாக இந்திய விமானங்கள் தங்கள் நாட்டுவான்பரப்பை பயன்படுத்த பாகிஸ்தான் தடை விதித்தது.

இதனால் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா செல்லும் ஏர் இந்தியா விமானங்கள் நீண்ட தூரம் சுற்றிச்செல்ல வேண்டியுள்ளது. இது எரிபொருள் உள்பட விமானத்தை இயக்குவதற்கான செலவுகளைப் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

3 ஆண்டுகளில் ரூ.32,210 கோடி இழப்பு: கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ஏர் இந்தியாவுக்கு மொத்தம் ரூ.32,210 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நிதி நெருக்கடியைச் சமாளிக்க, அதன் முக்கியப் பங்குதாரர்களான டாடா சன்ஸ் மற்றும் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனங்களிடம் கடந்த ஆண்டு ரூ.10,000 கோடி கூடுதல் நிதி கேட்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் பாதிப்பு: ஏர் இந்தியாவில் 25.1 சதவீதப் பங்குகளை வைத்துள்ள சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனமும் இந்த நஷ்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

மராட்டியம்: மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த பள்ளி வேன் டிரைவர் கைது

மும்பை, ஜன.24:

மராட்டிய மாநிலம் தானே மாவட்டம் பத்லாபூர் பகுதியில் தனியார் பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் மாணவ, மாணவியரை அழைத்துச்செல்ல வேன் உள்ளது. இந்த வேனின் டிரைவராக 35 வயது நபர் வேலை செய்து வந்தார்.

இந்நிலையில், அந்த பள்ளியில் உள்ள மாணவ, மாணவியர் நேற்று மாலை வகுப்பு முடிந்து வேனில் வீட்டிற்கு சென்றுள்ளனர். அனைத்து மாணவ, மாணவியரையும் இறக்கிவிட்டப்பின் கடைசியாக இருந்த மாணவிக்கு வேன் டிரைவர் வேனில் வைத்து பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். வேன் டிரைவர் பாலியல் தொல்லை கொடுத்தது குறித்து பாதிக்கப்பட்ட மாணவி தனது பெற்றோரிடம் கூறியுள்ளார். இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த மாணவியின் பெற்றோர் உடனடியாக போலீசில் புகார் அளித்துள்ளார். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், வேன் டிரைவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். வேன் டிரைவரின் பெயர் குறித்த விவரத்தை போலீசார் தெரிவிக்கவில்லை.

ஜார்க்கண்ட்: மாவோயிஸ்ட் தலைவர் உள்பட 15 பேர் சுட்டுக் கொலை

புதுடெல்லி, ஜன.24:

மேற்கு சிங்பூம் மாவட்டத்தில் நிகழ்ந்த இந்த மோதல் குறித்து காவல் துறையினர் கூறியதாவது: கிரிபுரா காவல் நிலைய எல்லைக்குள்பட்ட சரான்தா வனப் பகுதியில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக தகவல் கிடைத்தது. அந்தப் பகுதியில் காவல் துறையினர் மற்றும் துணை ராணுவப் படையினர் என 1,500 பேர் அடங்கிய குழு ஏற்கெனவே பணியில் உள்ளது. மாவோயிஸ்டுகள் குறித்து தகவல் கிடைத்ததும் கடந்த இரு நாள்களாக தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. வியாழக்கிழமை காலையில் வனப் பகுதியில் பதுங்கியிருந்த மாவோயிஸ்டுகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இரு தரப்பும் பரஸ்பரம் துப்பாக்கியால் சுடத் தொடங்கினர். பாதுகாப்புப் படையினரின் தீவிர தாக்குதலை தாக்குப் பிடிக்க முடியாமல் மாவோயிஸ்டுகள் படிப்படியாகப் பின்வாங்கி அடர்ந்த வனத்துக்குள் தப்பியோடினர். அந்தப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் நடத்திய சோதனையின்போது, குண்டு பாய்ந்து உயிரிழந்த 15 மாவோயிஸ்டுகளின் உடல்கள் மீட்கப்பட்டன. மாவோயிஸ்ட் அமைப்பின் மூத்த தலைவர் பட்டிராம் மாஜி என்ற அனல் தா உடலும் மீட்கப்பட்டது.

கான்பூர் ஐஐடியில் தற்கொலைகள்: விசாரிக்க 3 பேர் குழு அமைப்பு

புதுடெல்லி, ஜன.24:

உத்தர பிரதேச மாநிலம், கான்பூர் ஐஐடியில் மாணவர் தற்கொலைகள் தொடர்வது குறித்து விசாரணை மேற்கொண்டு, நாட்டின் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் மாணவர் தற்கொலைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து பரிந்துக்க 3 பேர் குழுவை மத்திய அரசு வியாழக்கிழமை அமைத்தது.

கான்பூர் ஐஐடியில் கடந்த ஒரு மாதத்தில் இரண்டு மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

தேசிய கல்வி தொழில்நுட்ப அமைப்பின் (என்இடிஎஃப்) தலைவர் அனில் சஹஸ்ரபுத்தே தலைமையிலான இந்தக் குழுவில் மனநல நிபுணர் ஜிதேந்திர நாக்பால், மத்திய உயர்கல்வித் துறை இணைச் செயலர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்தக் குழு, 15 நாள்களுக்குள் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மக்கள்தொகை கணக்கெடுப்பில் கேட்க வேண்டிய 33 கேள்விகள் - மத்திய அரசு வெளியீடு

புதுடெல்லி, ஜன.24:

மக்கள்தொகை கணக்கெடுப்பின்போது குடிமக்களிடம் கேட்க வேண்டிய 33 கேள்விகளை மத்திய அரசு வியாழக்கிழமை வெளியிட்டது. நிகழாண்டு ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் செப்டம்பர் வரை வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணி நடைபெறவுள்ள நிலையில் மத்திய அரசு இந்த அறிவிக்கையை வெளியிட்டது. மக்கள்தொகை கணக்கெடுப்பு அறிவிப்பை கடந்த ஜூன் மாதம் மத்திய அரசு வெளியிட்டது. இரண்டு கட்டங்களாக இந்தக் கணக்கெடுப்புப் பணி நடைபெற உள்ளது. வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணியைத் தொடர்ந்து 2027-ஆம் ஆண்டு பிப்ரவரியில் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. மக்கள்தொகை கணக்கெடுப்புடன் ஜாதிவாரி கணக்கெடுப்பும் சேர்த்து நடத்தப்பட உள்ளது.

இந்நிலையில், இந்திய பதிவாளர் ஜெனரல் மிருத்யுஞ்சய் குமார் நாராயண் வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிக்கையில் குடிமக்களிடம் மக்கள்தொகை கணக்கெடுப்பு அதிகாரிகள் கேட்க வேண்டிய 33 கேள்விகள் இடம்பெற்றன.

இந்தப் பணிகளை மேற்கொள்ள ரூ.11,718 கோடி ஒதுக்கீடுசெய்யவும் மத்திய அமைச்சரவை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஒப்புதல் அளித்தது குறிப்பிடத்தக்கது.

வீட்டைவிட்டு சிறுவன் வெளியேறிய பெங்களூரில் மீட்பு

புதுடெல்லி, ஜன.24:

டில்லி புராரி பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுவனுக்கு சமூகஊடகத்தில் பிரபலமாக வேண்டும் என்று விருப்பம். இதனிடையே, கைப்பேசியில் கேமிங் விளையாடுதல், சமூகஊடகத்தில் குறுங்காணொலிகளைப் பதிவிடுதல் ஆகியவற்றிலும் அந்தச் சிறுவன் ஈடுபட்டு வந்தார். படிப்பைவிடுத்து கைப்பேசியை அதிக நேரம் பயன்படுத்தியதால் சிறுவனை அவரது பெற்றோர் கண்டித்து வந்தனர். கடந்த ஜன.11-ஆம் தேதி வழக்கம்போல சிறுவன் கைப்பேசியைப் பயன்படுத்திக்கொண்டு இருந்தார். இதைக் கண்டித்த தாயார், சிறுவனிடமிருந்து கைப்பேசியைப் பறித்தார். இதுதொடர்பாக தாயாருக்கும் மகனுக்கும் சண்டை ஏற்பட்டது. கோபித்துக்குக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிய சிறுவன், தனது தந்தையின் கைப்பேசியைஎடுத்துச்சென்றார்.

மகன் காணாமல் சென்றதை அறிந்த அவரது பெற்றோர் அக்கம்பக்கத்தில் தேடினர். பின்னர், தனது மகன் கடத்தப்பட்டதாக சிறுவனின் தந்தை காவல் நிலையத்தில் புகாரளித்தார்.

இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்த காவல் துறையினர், ஒரு தனிப்படை அமைத்து விசாரணை நடத்தினர். முதல்கட்ட விசாரணையில், சிறுவன் சமூகஊடகத்தில் விடியோக்கள் பதிவிடுவதும் அதற்கு அவரது பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், அவர் வீட்டைவிட்டு வெளியேறியதும் காவல்துறைக்குத் தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து, அந்தச் சிறுவன் தொடர்ந்து பயணித்து வருவதை உறுதிசெய்த போலீஸார், அவர் ரயிலில் மகாராஷ்டிரத்தைக் கடந்து சென்று கொண்டிருப்பதை அறிந்தனர். பின்னர், கைப்பேசி ஜன.14-ஆம் தேதி கர்நாடகத்தின் ஹுப்ளியில் பயன்படுத்தப்பட்டது கண்டறியப்பட்டது.

ரயிலின் பயண விவரங்களை ஆய்வு செய்த போலீஸார், பெங்களூருரயில்வே நிலையத்தில் ஜன.15-ஆம் தேதி காலையில் உள்ளூர் ரயில்வே காவலர்கள் சிறுவனைப் பாதுகாப்பாக மீட்டனர். சிறுவன் மீட்கப்பட்ட தகவலறிந்ததும் சிறுவனின் தந்தையுடன் டில்லி காவல் துறையினர் ஜன.19-ஆம் தேதி பெங்களூருக்கு வந்தனர். உரிய சட்டநடவடிக்கைகளுக்குப்பின் சிறுவன் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பெற்றோர் சம்மதத்துடன் நடைபெற்ற சிறுமியின் திருமணம்: சிறுமியை மீட்டு காப்பகத்தில் ஒப்படைத்த அதிகாரிகள்

திருமுடிவாக்கம், ஜன.24: குன்றத்தூரை அடுத்த திருமுடிவாக்கத்தில் நேற்று பெற்றோர் சம்மதத்துடன் நடைபெற்ற திருமணத்தில் மணப்பெண் 17 வயதே ஆன சிறுமி என்பதால் அவரை மீட்டு சமூக நலத்துறை அதிகாரிகள் காப்பகத்தில் ஒப்படைத்தனர்.

திருமுடிவாக்கம் பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுமிக்கு பெற்றோர் சம்மதத்துடன் நேற்று பழந்தண்டலத்தில் உள்ள வீட்டில் திருமணம் நடைபெற்றதாக காஞ்சிபுரம் மாவட்ட குழந்தைகள் நல அமைப்பு அலுவலர் அமுதாவுக்கு தகவல் கிடைத்தது.

அவர், இது குறித்து படப்பையைச் சேர்ந்த சமூக நலத்துறை அதிகாரி செல்விக்கு தகவல் தெரிவித்தார். உடனடியாக அதிகாரி செல்வி, தமது குழுவினருடன் நேற்று நள்ளிரவு பழந்தண்டலம் சென்று, அங்கு திருமணம் செய்த இளைஞருடன் இருந்த சிறுமியை மீட்டு, காஞ்சிபுரத்தில் உள்ள காப்பகத்தில் ஒப்படைத்தார்.

அவர் சிறுமி என்று தெரிந்தும் திருமணம் செய்த பழந்தண்டலம், சிக்னல் ஆபீஸ் ரோடு பகுதியைச் சேர்ந்த இளைஞர் தேவா (22), சிறுமியின் பெற்றோர், இளைஞரின் பெற்றோர் ஆகியோர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மகளிர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

கவிஞர் வைரமுத்து வரவேற்பு நிகழ்வில் காலணி வீச்சு - நடந்தது என்ன?

திருப்பூர், ஜன.24: திருப்பூரில் நேற்று நடை பெற்ற பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்க வந்த கவிஞர் வைரமுத்துவுக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே வழக்கறிஞர்கள் வரவேற்பு அளித்தனர். அங்கு வந்த 45 வயது மதிக்கத்தக்க பெண், திடீரென தர்ணாவில் ஈடுபட்டார்.

அதேவேளையில் வரவேற்பு நிகழ்வை முடித்துவிட்டு, கவிஞர் வைரமுத்து வாகனத்துக்கு செல்ல முயன்றார். அப்போது, தர்ணாவில் ஈடுபட்ட பெண், திடீரென வழக்கறிஞர்களை நோக்கி காலணிகளை வீசினார்.

அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போலீஸார், அந்த பெண்ணை பிடித்து திருப்பூர் தெற்கு காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்தனர். அவரது பெயர் ஜெயா என்பதும், மனநலம் பாதித்தவர் என்பதும் விசாரணையில் உறுதியானது.

அவ்வப்போது மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் நீதிமன்றம் உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து பிரச்சினையில் ஈடுபட்டு வந்தது தெரியவந்தது. அந்த பெண்ணை திருப்பூர் தெற்கு போலீஸார் கைது செய்தனர்.

காதல் விவகாரம்: வகுப்பறையில் கல்லூரி மாணவிக்கு கத்திக்குத்து - காதலன் கைது

கோயம்புத்தூர், ஜன.24: கோவை சரவணம்பட்டியில் உள்ள ஒரு தனியார் தொழில்நுட்ப கல்லூரியில் 17 வயது மாணவி பி.டெக். ஐ.டி. முதலாம் ஆண்டு படித்து வருகிறார். அதே கல்லூரியில் படித்து வரும் 18 வயது மாணவரும், அந்த மாணவியும் நட்பாக பழகினர். பின்னர் அது காதலாக மாறியது. அவர்கள் இருவரும் 3 மாதமாக காதலித்து வந்தனர்.

இதற்கிடையே அதே கல்லூரியில் படித்து வரும் மற்றொரு மாணவர், அந்த மாணவியை சந்தித்து, காதலிப்பதாக கூறியுள்ளார். அதற்கு அந்த மாணவி, தான் வேறு ஒருவரை காதலிப்பதாக கூறியதாக தெரிகிறது. ஆனாலும் தன்னை காதலிப்பதாக கூறிய அந்த மாணவரிடம், நட்புரீதியில் மாணவி பேசி வந்துள்ளார்.

இது அந்த மாணவியின் காதலனுக்கு தெரிய வந்தது. உடனே, அவர் தனது காதலியை சந்தித்து இனிமேல் நீ அவனுடன் பேசக்கூடாது என்று கண்டித்துள்ளார். ஆனாலும் அவருடன், மாணவி பேசி வந்துள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த மாணவர், தனது காதலியிடம் சென்று ஏன் நீ அவனிடம் பேசுகிறாய் என்று கேட்டுள்ளார். அதற்கு மாணவி, நட்பு முறையில் பேசுவதாக கூறியுள்ளார். இதனால் அவர்கள் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த நிலையில் நேற்று காலை வகுப்பறையில் அந்த மாணவருடன், மாணவி பேசிக்கொண்டு இருந்தார். அதை பார்த்த காதலன், தனது காதலியை கண்டித்துள்ளார். இதனால் அவர்கள் இடையே தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரம் அடைந்த காதலன், தனது பையில் இருந்த காய்கறி வெட்டும் கத்தியை எடுத்து மாணவியின் கன்னம் மற்றும் கையில் குத்திவிட்டு, தப்பி ஓடினார்.

இதில் காயமடைந்த மாணவியை சக மாணவ, மாணவிகள் மீட்டு சரவணம்பட்டியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். பின்னர் அவரை மேல் சிகிச்சைக்காக கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இது குறித்து சரவணம்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து தப்பி ஓடிய காதலனை கைது செய்தனர். காதல் விவகாரத்தில் கல்லூரி வகுப்பறைக்குள் மாணவியை, காதலன் கத்தியால் குத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சென்னை, செங்கல்பட்டு உள்ளிட்ட 7 மாவட்டங்களுக்கு சனிக்கிழமை கனமழை வாய்ப்பு!

சென்னை, ஜன.24: தமிழகத்தில் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் இன்று (ஜன.24) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கிழக்கு திசையில் இருந்து மேற்கு நோக்கி நகரும் வளிமண்டல அலை (EASTERLY WAVES) நிகழ்வு தற்போது நிலவுகிறது. மேலும் தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (ஜன.24) கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் சனிக்கிழமை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

25-ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 26-ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், கடலோர தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களிலும், 27 முதல் 29-ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமானது முதல் கனமழை பெய்யக்கூடும்.

இன்று மற்றும் நாளை தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

காஞ்சி காமகோடி பீடத்திடமே 3 யானைகளையும் திரும்ப ஒப்படைக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜன.24: காஞ்சிபுரம் காமகோடி பீடத்துக்கு சொந்தமான 3 யானைகளை பீடத்திடமே திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்ற தனி நீதிபதியின் உத்தரவை உறுதி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் வழிபாடுகளுக்காக சந்தியா, இந்து, ஜெயந்தி ஆகிய மூன்று யானைகள் உரிய சான்றிதழுடன் கோவில் திருவிழாக்கள், பூஜைகளுக்கு அவ்வபோது பயன்படுத்தப்பட்டு வந்தன.

இந்த யானைகளை கவனித்து வந்த பாகன் 2015ல் காலமானதால், 3 யானைகளும் வனத்துறையிடம் பராமரிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டன. இதையடுத்து திருச்சி எம்.ஆர் பாளையம், யானை காப்பகத்தில் 3 யானைகள் பராமரிக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில், யானைகளை பராமரிக்க தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளதால், கோனேரிக்குப்பம் யானைகள் மையத்துக்கு மீண்டும் அனுப்பக் கோரி காமகோடி பீடம் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், பீடத்துக்கு சொந்தமான கோனோரிக்குப்பம் மையத்தை நிபுணர் குழு ஆய்வு செய்ய உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, "சந்தியா, இந்து, ஜெயந்தி ஆகிய 3 யானைகளையும் காஞ்சி காமகோடி பீடத்திடம் 1 வாரத்தில் ஒப்படைக்க வேண்டும். காஞ்சி பீடத்தின் செலவில் வனத்துறை வாகனத்தில் பாதுகாப்பாக யானையை கொண்டு வர வேண்டும். யானைகளின் உடல்நிலை குறித்து 3 மருத்துவர்கள் கொண்ட குழுவினர் அறிக்கை தந்த பின்னர் கோனேரிகுப்பம் முகாமிற்கு மாற்ற வேண்டும். யானைகளை வழிபாடுகளுக்கு பயன்படுத்தலாம். மாதத்திற்கு 1 முறை யானையின் உடல் நலம் குறித்து மாவட்ட நல்வாழ்வுத்துறை ஆய்வு செய்ய வேண்டும்" என உத்தரவிட்டார்.

தனி நீதிபதியின் இந்த உத்தரவை எதிர்த்து வனத்துறை சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா, நீதிபதி அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, வனத்துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர், "யானைகளுக்கு வயதாகி விட்டது. 58 ஏக்கரில் உள்ள திருச்சி முகாமிற்கு மோசமாக உடல்நிலையில் 2019ம் ஆண்டு யானைகள் கொண்டு வரப்பட்டன. 8 யானைகள் இருந்த நிலையில் 1 யானை இறந்து விட்டதால், தற்போது 7 யானைகள் முகாமில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் யானைகளை அனுப்பினால், மீண்டும் உடல்நிலை பாதிக்க வாய்ப்பு உள்ளது. கால அவகாசம் அளிக்க வேண்டும்" என தெரிவிக்கப்பட்டது.

இதை ஏற்காத நீதிபதிகள், "பீடத்துக்கு சொந்தமான யானைகளை 6 ஆண்டுகள் வனத்துறை வைத்துள்ளது. போதுமான ஏற்பாடுகளை செய்துள்ள நிலையில், பீடத்திடம் யானைகளை தர வனத்துறை மறுக்க முடியாது. யானைகளை உரிய மருத்துவ பரிசோதனைக்கு பின் வழங்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார். அதனால், தனி நீதிபதியின் முடிவில் தலையிட முடியாது" என உத்தரவிட்டு வழக்கை தள்ளுபடி செய்தனர்.

ஜல்லிக்கட்டு போட்டி விதிகளை தளர்த்தியது தமிழக அரசு!

சென்னை, ஜன.24: ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்துவதில் உள்ள சிரமங்களை களையும் பொருட்டு, ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கான விதிமுறைகளில் சில தளர்வுகளை தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாட்டில் பாரம்பரிய வீர விளையாட்டான ஏறுதழுவுதல் என்னும் ஜல்லிக்கட்டு நடத்துவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

ஜல்லிக்கட்டுக்காகவே மதுரை அலங்காநல்லூரில் "கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்" அமைக்கப்பட்டு அனைவரும் பெருமைகொள்ளும் வகையில் அங்கே ஜல்லிக்கட்டு நடைபெற்று வருகிறது.

17-01-2026 அன்று அலங்காநல்லூர் பகுதியில் நடைபெற்ற ஏறுதழுவுதல் போட்டியை பார்வையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் பங்கு பெற்று அதிகக் காளைகளை அடக்கிச் சிறந்து விளங்கக்கூடிய வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கால்நடை பராமரிப்புத் துறையில் உரிய அரசுப் பணியிடங்களில் பணியமர்த்திட வழிவகை செய்யப்படும் என்றும், உலகப் புகழ் பெற்ற தமிழ்நாட்டின் ஜல்லிக்கட்டுக் காளைகளுக்கான சிறந்த உயர்தர சிகிச்சை மற்றும்

பயிற்சி மையம் 2 கோடி ரூபாய் செலவில் அலங்காநல்லூர் பகுதியில் அமைக்கப்படும் என்றும் இரண்டு சிறப்பான அறிவிப்புகளை அறிவித்தார்கள்.

மேலும், ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்துவதில் இருக்கும் ஒரு சில சிரமங்கள் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து அவற்றைப் பரிசீலித்து காளைகளுக்கு எவ்வித துன்பமும் நேராவண்ணமும், ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு இடையூறு இல்லாத வண்ணமும் தமிழ்நாடு அரசு சில தளர்வுகளை வழங்கிட நடவடிக்கை எடுத்துள்ளது.

1. உள்ளூர் காளைகளும், வீரர்களும் பங்குபெறுவதை உறுதி செய்திட ஏதுவாக, ஆன்-லைன் பதிவு முறையினை மாற்றி, அந்தந்த மாவட்ட அளவில் முடிவு செய்துகொள்ள வழிவகை செய்யப்படும்.

2. போட்டிகளின்போது இறக்க நேரிடும் மாடுபிடி வீரர்களுக்கு உரிய நிவாரணம் அரசு சார்பில் வழங்கப்படுகிறது. எனவே, மாடுபிடி வீரர்களுக்கு ஆயுள் காப்பீடு கட்டாயம் என்ற விதி தளர்த்தப்படும்.

3. இதுவரை ஜல்லிக்கட்டு போட்டி நடத்துபவர்களிடம் முத்திரைத் தாளில் பெறப்பட்டு வந்த உறுதிமொழிப் பத்திரம் என்ற நடைமுறை ரத்து செய்யப்படும்.

தமிழ்நாட்டின் பாரம்பரியத்தைக் காப்பதிலும், ஜல்லிக்கட்டு விளையாட்டினைத் தொடர்ந்து ஊக்குவித்திடவும், முதல்வரின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசுத்தமான குடிநீரால் இந்தூரில் 22 பேருக்கு உடல்நல பாதிப்பு: மீண்டும் அதிர்ச்சி

இந்தூர், ஜன.24: மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில், அசுத்தமான குடிநீரால் 23 பேர் உயிரிழந்தும், பலர் உடல்நலம் பாதிக்கப்பட்டும் சில வாரங்களே ஆன நிலையில், தற்போது மீண்டும் அசுத்தமான நீரைக் குடித்ததால் 22 பேர் நோய்வாய்ப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

இந்தூரின் மஹோவ் பகுதியில் அசுத்தமான குடிநீரைக் குடித்ததால் 22 பேர் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 9 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், மீதமுள்ள நோயாளிகள் மருத்துவக் கண்காணிப்பின் கீழ் வீடுகளிலேயே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மஹோவ் மற்றும் அதன் அருகிலுள்ள பகுதிகளிலும் சிலர் அசுத்தமான குடிநீரால் பாதிக்கப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 25ஐ தாண்டக்கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து புகார்கள் வெளிவரத் தொடங்கியதைத் தொடர்ந்து, மாவட்ட நிர்வாகம் நேற்று இரவு இதற்கான நடவடிக்கையில் இறங்கியது. மாவட்ட ஆட்சியர் சிவம் வர்மா நோயாளிகளைச் சந்திக்க மருத்துவமனைக்குச் சென்று, மீட்புப் பணிகளை மேற்பார்வையிட்டார்.

மேலும், பல்வேறு சுகாதாரக் குழுக்கள் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டன. பாதிக்கப்பட்ட சுற்றுப்புறங்களில் உள்ள நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மாத தொடக்கத்தில் இந்தூரில் அசுத்தமான குடிநீரால் பாதிக்கப்பட்டு சுமார் 25 பேர் உயிரிழந்ததாக உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர். ஆனால், அதிகாரப்பூர்வ தரவுகளின்படி இறப்பு எண்ணிக்கை 15 என அரசு தரப்பு தெரிவித்தது. குடிநீர் மாசுபாட்டிற்கான காரணங்களை விசாரிக்கவும், இது மீண்டும் நிகழாமல் தடுக்க பரிந்துரைகளை வழங்கவும் அரசாங்கம் ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்தது.

இந்த விவகாரம் மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்திலும் விசாரணையில் உள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட 21 பேரின் குடும்பங்களுக்கு அரசு தரப்பில் தலா ரூ.2 லட்சம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

"அதிமுக இன்னும் கொஞ்சநாள் பத்திரமாக இருக்க வேண்டும் என்பதே எங்கள் கவலை" - கனிமொழி எம்.பி

தஞ்சாவூர், ஜன.24: இன்னும் கொஞ்சநாள் அதிமுக பத்திரமாக இருக்க வேண்டும் என்பது தான் தங்களது கவலையாக இருப்பதாக எம்.பி. கனிமொழி தெரிவித்தார். தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி பகுதியில் வரும் 26-ம் தேதி, திமுக மகளிரணி மாநாடு நடைபெற உள்ளது.

மாநாட்டு ஏற்பாடுகளை நேற்று ஆய்வு செய்த எம்.பி. கனிமொழி செய்தியாளர்களிடம் கூறியது: மேற்கு மண்டலத்தில் வெல்லும் தமிழ் பெண்கள் மகளிர் அணி மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

அந்த மாநாடு, பெண்களின் ஆதரவு யார் பக்கம் இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக எடுத்து சொல்லக்கூடிய வகையில் அமைந்திருந்தது. தமிழகம் முழுவதும் பெண்கள் திமுகவை சார்ந்து இருக்கிறார்கள்.

அவர்கள் மறுபடியும் திமுக வெற்றிபெற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள் என்பதை எடுத்து சொல்லக்கூடிய மாநாடாக, தஞ்சாவூரில் நடைபெறும் மாநாடு நிச்சயமாக அமையும். சுமார் 1.25 லட்சம் மகளிருக்கு மேல் இந்த மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

அதிமுக தேர்தல் அறிக்கை வெளியிடவில்லை. சில அறிவிப்புகளை தான் வெளியிட்டு இருக்கிறது. அதிமுக ஏற்கெனவே திட்டமாக அறிவித்ததை, அவர்கள் செயல்படுத்த மறந்துவிட்டார்கள்.

பெண்களுக்கு ஸ்கூட்டி வழங்கும் திட்டத்தை, பிரதமரை அழைத்து ஒரு திட்டமாக அறிவித்தார்கள். அதை யாருக்கும் கொடுக்காததால், அதை மறந்து விட்டு, மறுபடியும் தேர்தல் அறிவிப்பாக வெளியிட்டுள்ளனர். எனவே, அதுகுறித்து கருத்து சொல்ல ஒன்றும் இல்லை.

அதிமுக தங்களுக்கு உடன்பாடு இல்லாதவர்களுடன் இணைந்து ஒரு கூட்டணியை உருவாக்கினால், எப்படி வெற்றி பெற முடியும். அதிமுக என்ற கட்சி இன்னும் கொஞ்சம் நாளாவது பத்திரமாக இருக்க வேண்டும் என்று தான் தொடர்ந்து சொல்லிக் கொண்டு உள்ளோம். எங்களது கவலையும் அதுவாகத்தான் உள்ளது.

தேர்தல் வருவதால் பிரதமர் மோடி தமிழகத்துக்கு அடிக்கடி வருவார். இவ்வாறு அவர் கூறினார். அப்போது எம்.பி. முரசொலி, எம்எல்ஏக்கள் துரை. சந்திரசேகரன், டிகேஜி.நீலமேகம், பூண்டி கலைவாணன், மேயர் சண்.ராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

கொடுக்கல், வாங்கல் பிரச்சினையில் நண்பரை கொலை செய்தவருக்கு ஆயுள் தண்டனை

சென்னை, ஜன.24: நண்பரை கட்டையால் அடித்துக் கொலை செய்த நபருக்கு ஆயுள் தண்டனை விதித்து சென்னை கூடுதல் அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை காசிமேடு சிங்காரவேலன் நகரைச் சேர்ந்த மீனவர் சுரேஷ் (27). இவரும் அதே பகுதியைச் சேர்ந்த சதீஷ்குமாரும் (23) நண்பர்கள். இருவருக்குமிடையே பணம், கொடுக்கல் வாங்கலில் தகராறு இருந்தது.

கடந்த 2015-ம் ஆண்டு பிப்.6 அன்று உணவகம் முன்பாக நின்று கொண்டிருந்த இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டு தகராறு முற்றியது. ஆத்திரமடைந்த சதீஷ்குமார் கட்டையை எடுத்து சுரேஷின் தலையில் அடித்தார்.

இதில் படுகாயமடைந்த சுரேஷ் சிகிச்சை பலனின்றி இறந்தார். இது தொடர்பாக காசிமேடு போலீஸார் வழக்குப்பதிந்து சதீஷ்குமாரை கைது செய்தனர்.

சமயபுரம் மாரியம்மன் கோவிலில் தைப்பூச திருவிழா தொடங்கியது

திருச்சி, ஜன.24: அம்மன் கோவில்களில் மிகவும் பிரசித்தி பெற்றது திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் திருவிழாக்களில் சித்திரை தேரோட்டம், பூச்சொரிதல் விழா, தைப்பூச திருவிழா ஆகியவை மிகச்சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு தைப்பூச திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதையொட்டி, காலையில் உற்சவர் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து அம்மன் மர கேடயத்தில் மேளதாளங்கள் முழங்க கொடிமரம் முன்பு எழுந்தருளினார். அதைத் தொடர்ந்து கொடி மரத்திற்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டன. தொடர்ந்து மாரியம்மன் படம் வரையப்பட்ட துணியாலான கொடியை தங்க கொடிமரத்தில் கோவில் குருக்கள் காலை 7.40 மணிக்கு ஏற்றினர்.

அதைத்தொடர்ந்து காப்பு கட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதைத்தொடர்ந்து கொடிமரத்திற்கு மகா தீபாராதனை நடைபெற்றது. இதில் கோவில் இணை ஆணையர் சூரிய நாராயணன் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள், பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

இதையடுத்து, இரவில் அம்மன் மர கேடயத்தில் எழுந்தருளி கோவிலை வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். தொடர்ந்து ஒவ்வொரு நாளும் காலையில் பல்லக்கிலும், இரவில் பூத வாகனம், மர அன்ன வாகனம், மர ரிஷப வாகனம் உள்ளிட்ட வாகனங்களிலும் அம்மன் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

மேலும் ஜனவரி 31ம் தேதி தெப்ப திருவிழாவும், பிப்ரவரி 1ம் தேதி திருக்கோயிலிலிருந்து அம்மன் கண்ணாடி பல்லக்கில் புறப்பாடும், தொடர்ந்து இரவு வடதிருக்காவேரி கரையில் அரங்கநாதரிடமிருந்து சீர்பெறும் நிகழ்வும் நடைபெறும். பிப்ரவரி 2ம் தேதி அம்மன் மஹா அபிஷேகத்துடன் வழி நடை உபயங்களை கண்டருள்கிறார்.

தொடர் விடுமுறை - சென்னையில் இருந்து 2 ஆயிரம் சிறப்பு பஸ்கள் இயக்கம்

சென்னை, ஜன.24: குடியரசு தினம் 26-ந் தேதி (திங்கட்கிழமை) வருவதையொட்டி சனி, ஞாயிறு வழக்கமான விடுமுறை உடன்தொடர்ந்து 3 நாட்கள் அரசு விடுமுறை கிடைக்கிறது.

இதனால் வெளியூர் பயணம் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக கருதி அரசு போக்குவரத்து கழகங்கள் சார்பாக சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன.

இன்று (வெள்ளிக்கிழமை) கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோவை, சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய பகுதிகளுக்கு 550 பஸ்களும் நாளை (சனிக்கிழமை) 450 பஸ்களும் கூடுதலாக இயக்கப்படுகிறது.

கோயம்பேட்டில் இருந்து இருந்து திருவண்ணாமலை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, ஒசூர், பெங்களூரு சிறப்பு பஸ்கள் விடப்பட்டுள்ளது. இது தவிர பெங்களூரு திருப்பூர் ஈரோடு, கோயம்புத்தூர் நகரங்களில் இருந்து பல்வேறு பகுதிகளுக்கு 200 பஸ்கள் விடப்பட்டுள்ளன. மாதவரத்தில் இருந்து இன்றும் நாளையும் 24 சிறப்பு பஸ்கள் கூடுதலாக இயக்கப்படுகிறது.

சொந்த ஊர் சென்றவர்கள் சென்னை திரும்ப வசதியாக 26-ந் தேதி 800 சிறப்பு பஸ்கள் பல்வேறு நகரங்களில் இருந்து இயக்கப்பட உள்ளன.

கூட்ட நெரிசல் இல்லாமல் பயணம் செய்வதற்கு முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தனியார் ஹெலிகாப்டர் நிறுவனத்தை மிரட்டிய விசிக எம்எல்ஏ பாலாஜி மீது வழக்கு பதிய வேண்டும்: பாஜக

சென்னை, ஜன.24: சென்னை கோவளத்தில் உள்ள தனியார் ஹெலிகாப்டர் போக்குவரத்து நிறுவனத்தினரை மிரட்டிய விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் பாலாஜி மீது உரிய பிரிவுகளில் வழக்குப் பதிய வேண்டும் என்று பாஜக வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் தலைமை செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதி வெளியிட்டுள்ள அறிக்கையில், "சென்னை கோவளத்தில் தனியார் ஹெலிகாப்டர் போக்குவரத்து நிறுவனத்தினரை மிரட்டி லஞ்சம் கேட்டதாகவும், குண்டர்களை வைத்து தங்களை அலுவலகத்திற்குள் சிறை வைத்ததாகவும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் பாலாஜி மீது அந்நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி தமிழக சபாநாயகர் அப்பாவுவிடம் புகார் அளித்ததாக செய்தியை காண நேர்ந்தது.

இது குறித்து கேட்டதற்கு, அந்த ஹெலிகாப்டரை இயக்கும் பைலட்டுக்கு லைசென்ஸ் உள்ளதா, ஹெலிகாப்டர் எந்த ஆண்டு தயாரிக்கப்பட்டது? அதற்கு காப்பீடு உள்ளதா என்ற கேள்விகளுக்கு பதில் சொல்லாததால் தான் இந்நிலை என்று சட்டமன்ற உறுப்பினர் கூறியுள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

மத்திய, மாநில அரசுகளின் அனுமதியோடு செயல்படும் நிறுவனத்தை கேள்விகேட்டு மிரட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினருக்கு எந்த அதிகாரமும் இல்லை. மேலும், மிரட்டி லஞ்சம் கேட்பதும், துன்புறுத்துவதும் பெரும் குற்றம்.

இது குறித்து சபாநாயகரிடம் புகார் அளிக்க வேண்டிய கட்டாயம் ஏன் ஏற்பட்டது? காவல்துறையினரிடம் புகார் அளிக்கவில்லையா? அல்லது புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லையா? என்பது போன்ற கேள்விகளுக்கு தமிழக அரசு விளக்கமளிப்பதோடு, துரித விசாரணை நடத்தி சட்டமன்ற உறுப்பினர் மீது உரிய பிரிவுகளில் வழக்கு பதிய உத்தரவிட வேண்டும்.

சட்டம், ஒழுங்கை சட்டமன்ற உறுப்பினர்களே சீர்குலைக்கும் அளவிற்கு திராவிட மாடல் திமுக ஆட்சியில் தமிழகம் தடுமாறிக்கொண்டிருப்பது வெட்கக்கேடு'' என தெரிவித்துள்ளார்.

இளையான்குடியில் ரூ 28 கோடி மதிப்பிலான

அம்ரூத் 2.0 குடிநீர் திட்டம் கிடப்பில் போடப்பட்டதாக பேரூராட்சி கூட்டத்தில் அதிமுக கவுன்சிலர் புகார்

மானாமதுரை, ஜன24: சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் ரூ 28 கோடி மதிப்பிலான அம்ரூத் 2.0 குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் அதிமுக கவுன்சிலர் நாகூர்மீரா புகார் தெரிவித்துப் பேசினார். இளையான்குடி பேரூராட்சி மன்றக் கூட்டம் அதன் தலைவர் நஜுமுதீன் தலைமையில் நடைபெற்றது. இதில் துணைத் தலைவர் இப்ராகிம், செயல் அலுவலர் அன்னலெட்சுமி, சுகாதார ஆய்வாளர் தங்கதுரை, தலைமை எழுத்தர் கணேசன் மற்றும் வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் வாசிக்க பட்டது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் உறுப்பினர் ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்டது.

அதைத்தொடர்ந்து கூட்டத்தில் உறுப்பினர்கள் பேசிய விபரம். நாகூர் மீரா அதிமுக கவுன்சிலர் இளையான்குடி பேரூராட்சி பகுதிக்கு குடிநீர் வழங்குவதற்காக அம்ரூத் 2.0 திட்டத்தில் ரூ.28 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்காக கச்சாத்தநல்லூர் வைகை ஆற்றுப் பகுதியில் தரைமட்டக் கிணறுகள் தோண்டும் பணி பல மாதங்களாக நடைபெறாமல் உள்ளது. இதனால் இந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக மக்கள் நினைக்கின்றனர். இந்த திட்டத்தை விரைவில் நிறைவேற்றி பொது மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டும். இந்த குடிநீர் திட்டப் பணிகளுக்காக பேரூராட்சி பகுதியில் வீதிகள் முழுவதும் குழாய் பதிக்க தோண்டப்பட்ட பள்ளங்களில் சிமெண்ட் கலவை கொட்டி சமப்படுத்தும் பணி தரமில்லாமல் மேற்கொள்ளப்பட்டுகிறது.

இதை தலைவர், செயல் அலுவலர் ஆய்வு செய்ய வேண்டும் என்றார். திமுக கவுன்சிலர் செய்யதுஜமீமா பேசியதாவது நகரில் மத்தியில் உள்ள குப்பைகிடங்கைமாற்ற அதற்கான முயற்சியில் பேரூராட்சி நிர்வாகம் ஈடுபட்டு பொது மக்களுக்கு நோய் தொற்று ஏதும் வராமல் பாதுகாக்கவேண்டும். இளையான்குடி பகுதியில் விடுபட்டு உள்ள வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பேசினார்.

அதைத்தொடர்ந்து பேசிய உறுப்பினர்கள் நகருக்குள் பொதுமக்கள் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் உள்ள குப்பைக் கிடங்கை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய வேண்டும் என்றனர். இதற்கு பதிலளித்த தலைவர் நஜுமுதீன், துணைத் தலைவர் இப்ராகிம் ஆகியோர் எக்காரணம் கொண்டும் 2.0 குடிநீர் திட்டம் கைவிடப்படாது. தரைமட்டக் கிணறுகள் அமைக்கும் வைகையாற்று பகுதியில் கிராம மக்களின் ஆட்சேபம் உள்ளதால் அவர்களை சமாதானம் செய்து பின்னர் கிணறுகள் அமைக்க வேண்டிய நிலை உள்ளதால் இந்த நடவடிக்கைக்கு பின்னர் குடிநீர் திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்படும். குப்பைக்கிடங்கை மாற்று இடத்தில் அமைக்க நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றனர்.

நெல்லையில் வீடு புகுந்து பேட்டரி, இன்வெர்ட்டர்கள் திருட்டு: 2 பேர் கைது

திருநெல்வேலி, ஜன.24: திருநெல்வேலி மாநகரம் பெருமாள்புரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட எழில்நகர் மற்றும் ஆனையர்குளம் பகுதிகளில் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து சுமார் ரூ.55 ஆயிரம் மதிப்புடைய இரண்டு பேட்டரிகள் மற்றும் இரண்டு இன்வெர்ட்டர்களை திருடிய சம்பவங்கள் நடைபெற்றுள்ளது.

இதுகுறித்த புகாரின்பேரில் பெருமாள்புரம் போலீசார் ராஜவல்லிபுரத்தை சேர்ந்த ஜான் மகன் ஜோசப்எபினேசர் (வயது 33) மற்றும் இலந்தைகுளம் முருகன் கோவில் தெருவை சேர்ந்த முத்தையா மகன் முத்து(23) ஆகிய 2 பேரை போலீசார் கைது செய்து திருடுபோன பொருட்களை அவர்களிடம் இருந்து மீட்டு, அவர்கள் 2 பேரையும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

ஆளுநர் உங்களுக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா? - அண்ணாமலை

சென்னை, ஜன.24: தமிழக பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவரும் தேசிய பொதுக்குழு உறுப்பினருமான அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

திமுக கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில், 10% கூட முழுமையாக நிறைவேற்றாமல், நாளொரு நாடகம் நடத்திக் கொண்டு, நாட்டு நடப்பு என்னவென்றே தெரியாமல், யார் எதை எழுதிக் கொடுத்தாலும், அதை அப்படியே கிளிப்பிள்ளை போல ஒப்பிக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே,

SAMAGRA SHIKSHA திட்டத்தின் ஒரு அங்கமான PM SHRI பள்ளிகளை தமிழகத்தில் கொண்டு வருவோம் என்று கடிதம் மூலமாக தெரிவித்துவிட்டு, பின்னர் அந்தர் பல்டி அடித்தது ஏன்? நிறைவேற்றாத திட்டத்துக்கு நிதி எப்படி ஒதுக்குவார்கள்?

DELIMITATION-ல் தென் மாநிலங்களில் எந்த தொகுதியும் குறைக்கப்படாது என்று, மத்திய உள்துறை அமைச்சர்

அமித் ஷா, கடந்த 2025ஆம் ஆண்டு பிப்ரவரி மாதமே தெரிவித்துவிட்டார். உங்களுக்கு செய்தித்தாள் வாசிக்கும் பழக்கம் இருக்கவாய்ப்பில்லை. உங்களுக்கு எழுதிக் கொடுப்பவர்களுக்குமா இல்லை?

தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு அதலபாதாளத்தில் இருக்கும்போது, ஆளுநர் உங்களுக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா? உங்கள் நிர்வாகத் தோல்விக்கு ஆளுநரை குற்றம் சொல்வதை

எப்போது நிறுத்துவீர்கள்?

100 நாள் வேலை திட்டத்தை 150 நாட்களாக உயர்த்துவோம் என்று நீங்கள் தேர்தல் வாக்குறுதி கொடுத்து ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால், ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடாமல் இருக்கிறீர்கள். மத்திய அரசு தற்போது அதனை 125 நாட்களாக உயர்த்தி இருக்கிறது. இனிமேலும் அத்திட்டத்தில் உங்கள் கட்சியினரால் ஊழல் செய்ய முடியாது என்ற இயலாமை, உங்களை இப்படி புலம்ப வைத்திருக்கிறது.

AIIMS கட்டுமானம் வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. வேங்கைவயலுக்குதான் நீங்கள் போகவில்லை. மதுரைக்குச் சென்று பார்த்திருக்கலாமே? உங்களை யார் தடுத்தார்கள்? நீங்கள் விரும்பவில்லை என்றாலும், இந்த வருடம் மதுரை AIIMS, மக்கள் பயன்பாட்டிற்கு வரும். மதுரையில் வேளாண் பல்கலைக்கழகம் அமைப்போம் என்று நீங்கள் கொடுத்த வாக்குறுதி நினைவில் இருக்கா? குறைந்தபட்சம் ஒரு செங்கல்லாவது வைத்தீர்களா?

இயற்கைபேரிடர்களுக்கான நிதியை மத்திய அரசு விடுவித்துவிட்டது. 5000 கோடி ரூபாய் செலவு செய்தும், வருடந்தோறும் சென்னையை வெள்ளக்காடாக மாற்றுவதே உங்கள் சாதனை.

கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு வேண்டுமென்றே உங்கள் அரசு தவறான DPR-ஐ வழங்கியது உங்களுக்கு நினைவில் இருக்கிறதா? திருத்தம் செய்யப்பட்ட DPR-ஐ மீண்டும் சமர்ப்பிக்க எண்ணம் இருக்கிறதா இல்லையா?

கீழடி ஆய்வறிக்கை, உலகளாவிய அளவில் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதால், மேலும் அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் வேண்டும் என்று கேட்கிறது மத்திய அரசு. அந்த ஆதாரங்களைக் கொடுக்க என்ன தயக்கம் உங்கள் அரசுக்கு?

நீட் தேர்வை, தமிழக மக்கள் எதிர்க்கவில்லை. ஏழை, எளிய மாணவர்களுக்கு, நீட் ஒரு வரப்பிரசாதம் என்பதை, ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகளில் இணையும் எளிய பின்புலம் கொண்ட பெற்றோர்கள் கூறுவார்கள். மருத்துவக் கல்வி இடங்களை விற்று, இத்தனை ஆண்டு காலம் பல கோடி சம்பாதித்த திமுக கும்பலுக்கு மட்டுமே நீட் தேர்வு கசக்கிறது.

ஒரு காலத்தில், தங்களுக்குப் பிடிக்காதவர்கள் குறித்து, பொதுக்கழிவறைகளில் கரித்துண்டால் எழுதி அற்ப சந்தோஷப்படும் மோசமான பழக்கத்தை, AI காலத்திலும் தொடராதீர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே. இனியாவது மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பிரதமர் பங்கேற்கும் பொதுக்கூட்ட மேடையில் 'மாம்பழம்' சின்னம் - ராமதாஸ் கடும் எதிர்ப்பு

சென்னை, ஜன.24: அங்கீகரிக்கப்படாத ஒரு சின்னத்தை, பிரதமர் பங்கேற்கும் ஒரு பொதுக்கூட்ட மேடையில் காட்சிப்படுத்துவது சட்டவிரோதமானது என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

இன்று மதுராந்தகத்தில் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணியின் (NDA) தேர்தல் பிரசாரத் தொடக்க விழாவில், நான் நிறுவிய பாட்டாளி மக்கள் கட்சியின் வரலாற்றுச் சின்னமான 'மாம்பழம்' சின்னம் மேடையின் பின்னணியில் பயன்படுத்தப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இதனை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி, தற்போது பாட்டாளி மக்கள் கட்சிக்குள் நிலவும் தலைமைப் போட்டியால் 'மாம்பழம்' சின்னம் குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படாமல் நிலுவையில் (Pending) உள்ளது. எடப்பாடி பழனிசாமி தலைமையிலான கூட்டணியில் இணைந்துள்ள ஒரு பிரிவினர் (அன்புமணி தரப்பு), தேர்தல் ஆணையத்தால் இன்னும் அங்கீகரிக்கப்படாத ஒரு சின்னத்தை, நாட்டின் பிரதமரே பங்கேற்கும் ஒரு பொதுக்கூட்ட மேடையில் காட்சிப்படுத்துவது சட்டவிரோதமானது மற்றும் அப்பட்டமான அதிகார துஷ்பிரயோகம் ஆகும்.

இதன் மூலம் நான் தெரிவித்துக் கொள்வது:

தேர்தல் ஆணையத்தின் வசம் நிலுவையில் உள்ள ஒரு சின்னத்தை மேடையில் பயன்படுத்துவது தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிரானது.

பிரதமர் பங்கேற்கும் ஒரு நிகழ்வில், இத்தகைய சட்டவிரோதச் செயல்களைச் செய்வது பிரதமரின் பதவிக்கும், ஜனநாயக மரபுகளுக்கும் இழைக்கப்படும் அவமரியாதையாகும்.

'மாம்பழம்' சின்னம் பாட்டாளி மக்கள் கட்சியின் தொண்டர்களின் அடையாளம். அது இன்னும் யாருக்கும் ஒதுக்கப்படாத நிலையில், அதனை ஒரு குறிப்பிட்ட அணி தனக்கானதாகக் காட்டிக்கொள்வது தமிழக மக்களை ஏமாற்றும் செயலாகும்.

பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டப்பூர்வமான தலைமை மற்றும் சின்னம் குறித்த வழக்கு நீதிமன்றத்திலும், தேர்தல் ஆணையத்திலும் நிலுவையில் உள்ளது. இத்தகைய சூழலில், அதிகார பலத்தைப் பயன்படுத்திச் சின்னத்தை அபகரிக்க நினைக்கும் இச்செயலைத் தேர்தல் ஆணையம் உடனடியாகக் கவனித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசியல் அறமற்ற இந்தச் செயலைத் தமிழக மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு 2026 தேர்தலுக்கான விசில் ஊதப்பட்டுவிட்டது- காங்கிரஸ் நிர்வாகி பிரவீன் சக்கரவர்த்தி

சென்னை, ஜன.24: விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்திற்கு 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான அதிகாரப்பூர்வத் தேர்தல் சின்னமாக விசில் சின்னத்தை இந்திய தேர்தல் ஆணையம் ஒதுக்கியுள்ளது.

இந்நிலையில், தவெக கட்சிக்கு விசில் சின்னம் ஒதுக்கப்படடு விட்டதை குறிக்கும் வகையில் காங்கிரஸ் கட்சியின் தரவுப் பகுப்பாய்வுப் பிரிவு தலைவர் பிரவீன் சக்கரவர்த்தி பதிவு வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து பிரவீன் சக்கரவர்த்தி தனது எக்ஸ் தள பக்கத்தில்,"

தமிழ்நாடு 2026 தேர்தலுக்கான விசில் ஊதப்பட்டு விட்டது.

இப்போது அனைத்துக் கட்சிகளும் தேர்தல் ஓட்டத்திற்கு தயாரரி விட்டன" என ஆங்கிலத்தில் பதிவிட்டுள்ளார்.

ஏற்கனவே விஜயுடன் சந்திப்பு, ஆதரவுக் கருத்து என சர்ச்சை கிளப்பியவர் பிரவீன் சக்கரவர்த்தி என்பது குறிப்பிடத்தக்கது.

தி.மு.க.வில் இணைந்தது ஏன்? - மாணிக்கராஜா விளக்கம்

சென்னை, ஜன.24: அ.ம.மு.க. துணை பொதுச்செயலாளராக இருந்தவர் மாணிக்கராஜா. தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே உள்ள கடம்பூர் ஜமீன் பரம்பரையை சேர்ந்த இவர் தற்போது கயத்தாறு யூனியன் சேர்மனாக பதவி வகித்து வருகிறார்.

டி.டி.வி. தினகரனின் 25 ஆண்டுகால நண்பரான மாணிக்கராஜா, தென் மாவட்டங்களில் அ.ம.மு.க.வின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியதோடு, டி.டி.வி. தினகரனின் வலதுகரமாகவும் செயல்பட்டு வந்தார்.

கடந்த 2021-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின்போது கோவில்பட்டி தொகுதியில் அ.ம.மு.க. சார்பில் தின கரன் போட்டியிட்டபோது மாணிக்கராஜா கடுமையாக உழைத்தார்.

இந்நிலையில் அவர் இன்று காலை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேரில் சந்தித்து தன்னை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டார். அப்போது அவருடன் அ.ம.மு.க.வை சேர்ந்த 3 மாவட்ட செயலாளர்களும் தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். பின்னர் அவர் நிருபர்களை சந்தித்தபோது கூறியதாவது:-

தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைவதற்கு தொண்டர்களும், நிர்வாகிகளும் அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரனிடம் எதிர்ப்பு தெரிவித்தோம். ஆனால் அவர் எங்களது பேச்சை கேட்கவில்லை. அது எனக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தியது.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைவது நமக்கு ஆபத்து என பல முறை அவரிடம் எடுத்துக் கூறியும், அ.ம.மு.க. கட்சியை எதற்கு ஆரம்பித்தோம் என்பதை மறந்து இந்த முடிவை டி.டி.வி. தினகரன் எடுத்துள்ளார். தொண்டர்கள் விருப்பத்தை காது கொடுத்து கேட்க மறுத்துவிட்டார்.

இதனால் எனக்கு தேசிய ஜனநாயக கூட்டணியில் பயணிக்க விரும்பமில்லை. எனவே நல்லாட்சி நடத்தும் முதலமைச்சர் முன்னிலையில் தி.மு.க.வில் என்னை இணைத்துக் கொண்டுள்ளேன். இதுவும் தாய் கழகம் தான். இவ்வாறு அவர் கூறினார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com